விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 293 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 21 ஞாயிற்றுக்கிழமை (08.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

யாழ்.காங்கேசன்துறையில்
# வைரவருக்கு முன் புத்தர் சிலை!



(யாழ்ப்பாணம்)
யாழ்.காங்கேசன்துறையில் இராணுவ கட்டுப்பாட்டிலிருந்த ஞானவைரவர் ஆலயத்துக்கு முன்பாக புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.
(02ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சி கிழக்கில்
## விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்

(கரணவாய்)
வடமராட்சி கிழக்கில் விபரீத முடிவெடுத்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் வயலுக்கு பயன்படுத்தப்படும் நஞ்சு மருந்தை அருந்தியதால் சுகவீனமுற்ற நிலையில் 19

எதிர்வரும் 18ஆம் திகதி
## ஜனாதிபதி ரணில் யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளது.
19

## வருமானத்தை அதிகரிக்க ஜனாதிபதி புதிய முயற்சி

(கொழும்பு)
நாட்டின் வருமானத்தை அதிகரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.
உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம் 19

இலங்கை விரும்பியோ விரும்பாமலோ
## சர்வதேச விசாரணையை தவிர்க்க முடியாது
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



(கொழும்பு)
இலங்கை அரசாங்கம் விரும்பியோ விரும்பாமலோ சர்வதேச விசாரணையை தவிர்க்க முடியாது. அதனை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.
(03ஆம் பக்கம் பார்க்க)

சட்டவிரோதமான முறையில்
## லண்டன் பயணமான யாழ்.இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)
சட்டவிரோதமான முறையில் லண்டன் பயணமாகவிருந்த யாழ்.சாவகச்சேரியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
19




## அந்நிய செலாவணி அதிகரிப்பு

(கொழும்பு)
வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் சட்டரீதியாக இலங்கைக்கு 19

## காங்கேசன்துறை - நாகபட்டினம் கப்பல் சேவை நாளை மறுதினம் ஆரம்பம்
ஒரு வழிக்கு ரூ.27,000 இரு வழிக்கு ரூ.53,500
ஒரு பயணி 50 கிலோ பொருட்கள் கொண்டு செல்லலாம்

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்துக்குமான பயணிகள் கப்பல் சேவை நாளை மறுதினம் ஆரம்பமாகவுள் 19



## கொமாண்டோ சுட்டுக்கொலை

(கொழும்பு)
பொலிஸாரால் தேடப்பட்டு வந்த முன்னாள் கொமாண்டோ ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.
ஹங்வெல்லவில் STF உத்தியோகத்தர் 19

## அரசியல் தீர்வை வழங்க வேண்டும் ரணிலின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை
இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய

(கொழும்பு)
தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி இருக்கின்றார். இது தொடர்பான அவரின் நிலைப்பாடு மாறவில்லை. என வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.
இது தொடர்பில் 19

## முல்லை நீதிபதி விவகாரம் சூழ்ச்சியாக இருக்கலாம்
அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)
முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகலின் பின்னணியில் நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் சூழ்ச்சி இருக்கலாம். அது பற்றியும் தேடிப் பார்க்க வேண்டும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
19



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வைரவருக்கு...

யாழ். காங்கேசன்துறை - மாங் கொல்லை பகுதியில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த ஞான வைரவர் ஆலயத்திற்கு முன்பாக அரச மரத் தின் கீழ், ஆலயத்தை பார்க்கின்ற வகையில் புத்தர் சிலை வைக்கப் பட்டுள்ளது.

தற்பொழுது இராணுவ கட்டுப் பாட்டில் இருந்து விடுபட்ட நிலையில் அந்த பகுதியில் உள்ள வீடுகள் அனைத்தும் முழுமையாக சேத மடைந்து காணப்படுகின்றன. அங்கு ஒருசில வீடுகளின் சுவர்கள் நல்ல நிலையில் இருந்தாலும் கூரைகள் இல்லாமலும் ஜன்னல்கள் இல்லா மலும் காணப்படுகின்றன.

ஞானவைரவர் ஆலயம் எங்களது குல தெய்வம். இந்த ஆலயத்திற்கு சற்று தள்ளி முன் பக்கமாக ஒரு ஆலமரம் மாத்திரமே நின்றது. ஆனால் தற்போது ஆலயத்தின் முன் பக்கமாக தற்போது அரச மரம் உள் ளதுடன், அதன் கீழ் புத்தர் சிலையும் உள்ளது. இது நாங்கள் புலம் பெயர்ந்து சென்ற பின்னர் நாட்டப்பட்ட மரமாகத்தான் இருக்க முடியும்" என அங்கு வந்த மக்கள் தெரிவித்தனர்.

அந்த பகுதியில் இருந்த இரா ணுவத்தினர் தமக்கு வழிபட வேண்டிய தேவை இருந்தால் புத்தர் சிலையை வேறு ஒரு இடத்தில் வைத்து வழிபட்டிருக்க முடியும். ஆனால் அவர்கள் குறித்த ஆல யத்திற்கு முன் பாக அரச மரத் தினை வைத்து வளர்த்து, அதன் கீழ் புத்தர் சிலையை வைத் துள்ளமை மக் கள் மத்தியில் மீண்டும் ஒரு அச்சத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள் ளது. (ம-7)


## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

### குடியியல் நடவடிமுறைக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல்

விசுவலிங்கம் வைகுந்தவாசன்
நிர்வாகசபை உறுப்பினர்,
மாணிக்கவாசகர் மடாலய
அன்னதானசபை
ஈழத்துச்சிதம்பரம் தேவஸ்தானம்
திண்ணைபுரம் சிவன் கோவில்
காரைநகர்

வழக்காளி

வழக்கு இலக்கம்: விசேடம்/18/2021 எதிராக

1. பேரம்பலம் நாகரத்தினம்
இல. 383, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
2. கனகசபை சிவனேசன்
இல.3 கடையிற்சுவாமி வீதி,
யாழ்ப்பாணம்
3. பத்மநாதன் ஐங்கரன்
இல.20/3, சிவகுருநாதர் லேன்,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
4. சிவலிங்கம் கோணேசலிங்கம்
இல.8 ஆடியபாதம் றோட்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்
5. தியாகராசா ஸ்ரீமோகனதாஸ்
தேனு களஞ்சியம்
திருநெல்வேலி
6. குமாரசாமி சேந்தன்
சடையாளி
காரைநகர்
7. தம்பையா சிவானந்தராசா
கலைவாணியில் ஒழுங்கை
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்
8. பரமநாதர் சிவசுப்பிரமணியம்,
புதுறோட், காரைநகர்
9. செல்லையா கந்தசாமி,
இலந்தச்சாலை, காரைநகர்
10. தில்லையம்பலம்
வேலுப்பிள்ளை
தொல்புரம் வழக்கம்பரை

எதிராளிகள்

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியால்

அ) காரைநகர் திண்ணைபுரம் சிவன் கோவில், ஈழத்துச்சிதம்பரம் தேவஸ்தானம் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையில் வழக்காளி தொடர்ந்தும் நிர்வாகசபை உறுப்பினராக உள்ளார் என்ற பிடகடனமும், தீர்ப்பும்

ஆ) வழக்காளி ஆதீனகர்த்தாவால் முறையாக பதவி நீக்கம் செய்யப்படும் வரை காரைநகர் திண்ணைபுரம் சிவன் கோவில், ஈழத்துச்சிதம்பரம் தேவஸ்தானம் மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் சகல கூட்டங்களிலும் பங்கு கொள்ள உரிமையும் உரித்தும் உடையவர் என்ற பிரகடனமும், தீர்ப்பும்

இ) 04.07.2020 திகதி வழக்காளிக்கு அறிவிக்காமல் 1ம் எதிராளியினால் தன்னிச் சையாக கூட்டம் நடத்த தீர்மானித்தது சட்டமுரணானதும் சட்டமுறையற்றதும் வழமைக்கு எதிரானதுமாகும் என்ற பிரகடனமும், தீர்ப்பும்

ஈ) குறித்த 04.07.2020 திகதி வழக்காளிக்கு அறிவிக்காமல் 1ம் எதிராளியினால் தன்னிச்சையாக நடாத்தப்பட்ட கூட்டம் சட்டமுரணானதும் சட்டமுறையற்றதும் வழமைக்கு எதிரானதுமாகும் என்ற பிரகடனமும், தீர்ப்பும்

உ) குறித்த 04.07.2020 திகதி வழக்காளிக்கு அறிவிக்காமல் 1ம் எதிராளியால் தன்னிச்சையாக நடாத்தப்பட்ட கூட்டத்தில் எதிராளிகளினால் எடுக்கப்பட்ட அனைத்துத் தீர்மானங்களும் சட்டமுரணானதும் சட்டமுறையற்றதும் சட்ட வலிதற்றதும் என்ற பிரகடனமும் தீர்ப்பும்.

ஊ) இனிவருங்காலங்களில் இந்நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் காரைநகர் திண்ணைபுரம் சிவன்கோவில், ஈழத்துச்சிதம்பரம் தேவஸ்தானம் மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் நிர்வாக மற்றும் பொதுக் கூட்டங்கள் நடத் தப்படக்கூடாது என எதிராளிகளை பணிப்பதான நிரந்தர தடைக்கட்டளையும்

எ) வழக்குச் செலவும்

ஏ) மன்று தகுதி எனக்காணும் பிற நிவாரணங்களும் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கோரப்பட்ட நிவாரணங்கள் தொடர்பில் குறித்த விடயத்தில் அக்கறை உள்ள நபர் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடி முறைக் கோவையின் பிரிவு 16 இன் கீழ் அறிவித்தல் தரப்படுகின்றது.

வழக்கானது 09.01.2024 அன்று திறந்த மன்றில் கூப்பிடப்படும்

மன்றின் கட்டளைப்படி

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(17342)



## விற்பனைக்கு




0777 110383

(C-7397)



## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் புதிய பழைய கட்டடங்கள், கோவில், வில்லு மண்டபங்கள், கொங்கிறீட் சிலப்புகள் அனைத்திற்குமான நீர் கசிவை தடுப்பதற்கும் மற்றும் வீடுகளில் ஏற்படும் வெடிப்புகளை உத்தரவாதத்துடன் சீர்செய்யும் தருவோம். நீங்களும் இரசாயன பொருட்களை பெற்றும் சீர்செய்யலாம்.

10 வருட உத்தரவாதத்துடன், பொருள்களுக்கு விலைக்கழிவும் உண்டு Finexஸ்தாபனத்தாரின் வட மாகாண ஏக விநியோகத்தர்களிடம் இருந்து உலகத்தரமிக்க இரசாயன பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முதன் முதலில் வடமாகாணத்தில் அறிமுகம் செய்தவர்கள் போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

(17383)

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com



## நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான கப்பல் சேவை

பெர்ஷிப்பின் கீழ் ஆஷா ஏஜென்சீஸ் லிமிடெட், தி ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா (எஸ்சிஐ) உடன் இணைந்து இந்தியா, நாகப்பட்டினம் மற்றும் இலங்கை, காங்கேசன்துறைக்கு (KKS) இடையே எதிர்வரும் 10.10.2023 அன்று பயணிகள் கப்பல் சேவையைத் தொடங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ளது.

அறிமுக பயணக்கட்டணங்கள்

இரு வழி -
ரூபா 53,500/=
ஒரு வழி -
ரூபா 27,000/=



யாழ்ப்பாணத்தில் பயணச்சீட்டுகளை கையாள இரண்டு முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்

JAFFNA AIR SERVICES (PVT) LTD
தொடர்புகளுக்கு : திரு. குலசிங்கம் வசீகரன்,
தொடர்பு இலக்கம் : + 94 70 3788795
முகவரி : 906/23 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

சன்ரைஸ் ட்ராவல்ஸ்
தொடர்புகளுக்கு : திரு.தொண்டமானாபன் திவாகர்,
தொடர்பு இலக்கம் : + 94 76 7602829
முகவரி : பருத்தித்துறை வீதி, ஊரணி, காங்கேசன்துறை.

(C-7398)

PERSHIP SINCE 1889
As agents of The Shipping Corporation of India
Asha Agencies Ltd, (under the Perswhip Group)
No. 72C Bauddhaloka Mawatha
Colombo 04
Tel : +94114523900


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்பகப் புற்றுநோயால் வருடாந்தம் 700-800 பெண்கள் உயிரிழப்பு

## சமூக மருத்துவர் சுராஜ் பெரேரா தகவல்

(கொழும்பு)

நாட்டில் மார்பகப் புற்றுநோயால் வருடாந்தம் 700 தொடக்கம் 800 பேர் உயிரிழக்கின்றார்கள் என தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் ஆலோசகர் சமூக மருத்துவர் சுராஜ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2020 ஆம் ஆண்டளவில் இலங்கையில் 5,189 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். சுமார் ஒரு நாளைக்கு 14 நோயாளர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள்.

புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால் ஆரம்ப காலத்திலேயே நோயைக் குணப்படுத்தி விடலாம் என சமூக மருத்துவர் சுராஜ் வலியுறுத்தியுள்ளார்.

நோய்வாய்ப்பட்ட சுமார் 10,000 பெண்களுக்கு முழுமையாக சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. 20 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதாந்தம் மார்பகப் புற்றுநோய் பரிசோதனை செய்வது அவசியம் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## மலேசிய அமைச்சர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

மலேசியாவின் வெளிவிவகார அமைச்சர் டத்தோ ஸ்ரீ டிராஜா டாக்டர் ஜாம்ப்ரி அப்ட் காதிர் இன்று இலங்கைக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, மலேசிய வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சரான அலி சப்ரி பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடல்களை நிகழ்த்தவுள்ளதாகவும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. (நி)

## உயர்தர பரீட்சைக்கான விண்ணப்பகாலம் நீடிப்பு

(கொழும்பு)

2023 கல்வி பொது தராதர உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இம்முறை பரீட்சைக்கு இதுவரை விண்ணப்பிக்க முடியாத மாணவர்களின் நலன் கருதி விண்ணப்பகாலம் நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 2023 கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு நாளை மறுதினம் 10 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையை 2024 ஜனவரி 4 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடத்த பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்துங்கள் உத்தரவிட்டார் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டு முதல் கல்விப் பொதுத் தராதர உயர்தர மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் அரசியல் அதிகாரங்களுக்கோ அல்லது வேறு எவருக்கோ பரீட்சை திகதியை சட்டத்தின் மூலம் மாற்ற முடியாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடன் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இந்த பணிப்புரையை வழங்கியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த ஆண்டும் பரீட்சைகள் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் நடத்தப்பட வேண்டும்.

2025 ஆம் ஆண்டு முதல் பரீட்சைகளை நடத்துவதற்கு பிள்ளைகளுக்கு சுமை ஏற்படாத வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நாட்டில் பரீட்சைகள் பிற்போடப்படுவதனால் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் புலமைப்பரிசில்கள் பெறுவது, வயது வரம்பைத் தாண்டிச் செல்வது போன்ற பல பாதகமான விளைவுகளை மாணவர்கள் சந்திக்க நேரிடும் என அண்மையில் கல்வி நிபுணர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சர்வதேச விசாரணையை இலங்கை தவிர்க்க முடியாது

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

இலங்கை அரசு விரும்பியோ விரும்பாமலோ சர்வதேச விசாரணையை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துள்ளது என ஊடகங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களில் ஒரு தரப்பினர் இந்த அரசில் அங்கம் வகிக்கின்றனர். அதேவேளை, மற்றொரு தரப்பினரை இந்த அரசு பாதுகாத்து வருகின்றது.

இப்படியான அரசு எப்படி சர்வதேச விசாரணைக்கு இடமளிக்கமாட்டோம் என்று வெளிநாடுகளுக்கும் சர்வதேச அமைப்புக்களுக்கும் எவ்வாறு சவால் விட முடியும்? தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச விசாரணைக்கு அனுமதி வழங்கமாட்டேன் என்று கூறினாலும் இறுதியாகப் பதவிகளில் இருந்த மூன்று ஜனாதிபதிகளும் சர்வதேசம் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்பானவர்கள்.

எனவே, தற்போது ஜனாதிபதிப் பதவியில் இருப்பவரும் அவர் தலைமையிலான அரச தரப்பினரும் விரும்பியோ விரும்பாமலோ சர்வதேச விசாரணையை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துள்ளனர்" என தெரிவித்துள்ளார். (நி)

## நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் மீளாய்வு செய்யப்பட வேண்டும்

### சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம்

(கொழும்பு)

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குறித்து இலங்கை மீளசிந்திக்க வேண்டும் என சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் கருத்து சுதந்திரத்தின் மீது ஏற்படுத்துகின்ற தாக்கம் காரணமாக அரசாங்கம் இந்த சட்டமூலம் குறித்து மீள சிந்திக்க வேண்டும் என சர்வதேச அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஒக்டோபர் இரண்டாம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் இணையவெளியில் கருத்து சுதந்திரம் மற்றும் தகவல் சுதந்திரத்தை பாதிக்கின்றது என விமர்சனங்கள் வெளியாகியுள்ளன. பிழையான அறிக்கைகளை வரவிலக்கணப்படுத்தி ஒழுங்குபடுத்தி சட்டநடவடிக்கையை எடுப்பதற்கான அதிகாரம் புதிய ஆணைக்குழுவொன்றிற்கு வழங்கப்படவுள்ளது என சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் உட்பட பல அமைப்புகள் இலங்கை அரசாங்கம் இந்த சட்டமூலத்தை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும் ஊடகத்துறை சார்ந்தவர்களுடன் உடனடியாக இது குறித்து முழுமையான மறுஆய்வினை மேற்கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 2005 - 08 - 18



இறைவன் அடியில் 2021 - 10 - 01

யாழ்ப்பாணம், வடமராட்சி கரணவாய் மேற்கு மண்டானை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர். **கணேசன் கிருசிகன்** (ஹாட்லி கல்லூரி மாணவன்)

அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

*திதி- அபரபக்கத் தசமி*

ஆண்டுகள் இரண்டு இங்கே இருண்டு போனதய்யா...
ஆறாத துயரில் ஆழ்ந்து மாண்டு போகிறோமய்யா...
சாதனையின் நாயகனே! எங்கே நீ சென்றாய்??
சாதித்தது போதுமென்று சலித்துக் கொண்டாயோ?
வேதனைமிகு உன் பிரிவினை எப்படி ஆற்றிடுவோம்.
உன் மூச்சினில் வாழ்ந்த புல்லாங்குழலாய்
எம் இன்பங்கள் காற்றோடு கரைந்து கலைந்ததய்யா...
கணப்பொழுதேனும் உனை நினைக்க மறந்ததில்லை..
காதோரம் கதை பல பேசிய கிளியெங்கே ?
கனவெங்கே? நினைவெங்கே? காலம் பிரித்த உயிரெங்கே ?
கண்ணாமூச்சி ஆட்டத்தை ஆடிக்கொண்டு எங்கே இருக்கிறாய்?
நீளும் இரவிலும் நீங்கா நினைவிலும் நீ வருவாயென...
நிதம் தீராத ஏக்கங்களுடன் போராடி மடிகின்றோமய்யா....

(17361)

உன் வருகைக்காக உன்னை அரவணைக்க
காத்திருக்கும் அத்தைமார்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலிப கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில்
# ஆனைக்கோட்டை யூனியன் - நாவாந்துறை சென்மேரிஸ் மோதல்





இளவாலை வருத்தப்ப பாத வாலிப சங்கம் தனது 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தும் அணிக்கு 9 பேர் உள்ளடக்கிய "வாலிப கிண்ணம்" மாபெரும் உதைபந்தாட்ட போட்டியின் இறுதியாட்டம் இன்று இரவு 7 மணிக்கு மின்னொளியில் இடம்பெறும். அரையிறுதி ஆட்டங்கள் கடந்த வாரம் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றன. (நி)

# வடக்கு-கிழக்கு மாகாண மெய்வல்லுநர் போட்டியில்
## வவுனியா நெளுக்குளம் கலைமகள் மாணவர்கள் சாதனை






அகில இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சங்கம் நடத்திய சார்ஜான் டாபேட் சம்பியன்ஷிப் 2023 போட்டியின் முதல்கட்டமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் சேர்ந்து நடத்தப்பட்ட போட்டியில் வவுனியா நெளுக் குளம் கலைமகள் மகாவித்யாலய மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.


வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியானது அண்மையில் யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் இடம் பெற்றிருந்தது.

இப்போட்டியில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய மாணவர்களும் பங்குபற்றி வெற்றி பெற்று பாடசாலைக்கும், வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

14 வயது பெண்கள் பிரிவில் ர.டர்சியா 200m ஓட்ட போட்டியில் தங்க பதக்கமும் 100m இல் வெள்ளி பதக்கமும், ச.ரக்சனா நீளம் பாய்தல் போட்டியில் திறமை சான்றிதழும், 14வயது ஆண்கள் பிரிவில் ப. தர்சன் 100m போட்டியில் திறமை சான்றிதழும் 13 வயது பெண்கள் பிரிவில் வி.நிஷாணி 100m போட்டியில் திறமை சான்றிதழையும் பெற்றுள்ளனர். (நி-299)

## மரண அறிவித்தல்

மண்ணில்
15
.
04
.
1960



விண்ணில்
07
.
10
.
2023

## திரு.சதாசிவம் சிவானந்தம்

நெல்லியடி காளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவானந்தம் அவர்கள் 07.10.2023 சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் தயாளினி அவர்களின் அன்புக் கணவரும் சச்சிதானந்தம், செல்வராணி, நித்தியானந்தம், காலஞ்சென்ற சதானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சிந்துஜா, சிவாஜினி, சிவசங்கர், சிவதர்சினி, பிரசாத் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஞ்சித், நவநீதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ரகுநாதன், கருணைநாதன், சுபாசினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆதவி அவர்களின் அன்புப் பேரனும் பூமணி மற்றும் காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொலைபேசி இல. 077 547 2933 (17385)

தகவல் : குடும்பத்தினர்




## யாழ்ப்பாணம் மாநகரசபை
## கோம்பயன் மணல் இந்து மயானத்தில் மின்சாரத்தில் எரியூட்டுதல் தொடர்பான அறிவித்தல் - 2023

கோம்பயன் மணல் இந்து மயானத்தில் உள்ள மின்சாரத்தில் எரியூட்டும் இயந்திரம் மாநகர சபையால் தற்பொழுது புனரமைக்கப்பட்டு மீள்பாவனைக்கு விடப்படுகின்றது என்பதனை அறியத் தருகின்றேன்.

கட்டண விபரம் வருமாறு.

- மின்சாரத்தில் தகனம் செய்வதற்கு (பெரியவர்கள்) ரூபா 16,000.00
- மின்சாரத்தில் தகனம் செய்வதற்கு (சிறியவர்கள்) ரூபா 8,000.00


மாநகர ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(C-7394)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாணக்கியன், செந்தில் தொண்டமான் ஆகியோருக்கு எதிர்ப்பு தெரிவித்து

## விளக்குமாறுடன் வீதியிறங்கிய தேரர்



(மட்டக்களப்பு)

பாரம்பரிய மேய்ச்சல்தரை யாகப் பயன்படுத்தப்படும் மயிலத்தமடு பிரதேசத்தை விவசாய நடவடிக்கைகளுக்கு வழங்குமாறு கோரி அங்கு அத்துமீறிய பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படும் சிங்கள மக்கள் மட்டக் களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தலைமையில் ஆர்ப்பாட்டமொன்றினை மேற்கொண்டனர்.

இரா.சாணக்கியன் மற் றும் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோருக்கு எதிர்ப்பு வெளியிடும் முகமாக இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதிபரே கேளுங்கள் சிங்களவர்களை துரத்து கின்றார்கள், சாணக்கியன் தொண்டமான் எமக்கு வேண்டாம், இனவா தம் தூண்ட வேண்டாம் என்ற கோச ங்களை எழுப்பியவாறு இவர்கள் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். (நி)

# சாதாரண தர பாடங்களை 5 அல்லது 6 ஆக குறைக்க திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டிலிருந்து. சாதாரணதர பரீட்சையில் 5 அல்லது 6 பாடங்களாகக் குறைக்கப்படும் என கல்வி அமைச்சின் ஆலோசகர் பேராசிரியர் குணபால நாணயக்கார தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் இந்த நாட்டில் பரீட்சை முறையில் விரிவான மாற்றம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

மாணவர்களின் பரீட்சை சுமையை குறைக்கும் வகையிலும் தரத்தை உயர்த்தும் வகையிலும் 2025 ஆம் ஆண்டுக்குள் புலமைப்பரிசில் க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகளில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.


அதற்கமைய, க.பொ.த சாதாரண தரத்தில் 9 பாடங்களின் எண்ணிக்கையை 5 அல்லது 6 பாடங்களாகக் குறைக்க உள்ளதாகவும் கட்டாயம் அல்லாத பிரிவு பாடங்களுக்கு பாடசாலை வாரியங்களால் நடத்தப்படும் பரீட்சை மூலம் மதிப்பெண் வழங்கும் முறை பின்பற்றப்படும் எனவும் பேராசிரியர் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அதற்கான ஒரு முன்னோடி திட்டம் 2025 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஒரே நேரத்தில் 520 பாடசாலை வளாகங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக தற்போது 5 இல் இருந்து உயர்தரப் பாடங்களின் எண்ணிக்கை 8-9 ஆக அதிகரிக்கப்பட்டு மாணவர்கள் தெரிவு செய்வதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்படும்.

புதிய கல்வி சீர்திருத்தங்களின் கீழ், 1-13 தரங்கள் 1-12 ஆக குறைக்கப்பட்டு 12 ஆம் வகுப்பில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)





நீட் லங்கா நிறுவனத்தால் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் பெண்களுக்கான வாழ்வாதார உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டன. யாழ்.இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற இந்நிகழ்வில் தொழில்நுட்ப அமைச்சர் கனக ஹேரத் இதனை வழங்கி வைத்தார்.

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை

அமரர்

## ரேணுகா ஸ்ரீஸ்கந்தராஜா



கல்வளையான் அறப்பணியில்
கன்னியமாய் சேவை செய்த
கருமகிருதி ரேணுகா!
கணப்பொழுதும் அவன் தாளில்
கதிரொளியாய் ஆன்மா சாந்தி பெறுக!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-7392)

**08.10.2023**
**கல்வளை,**
**சண்டிலிப்பாய்.**

**தர்மகர்த்தா சபையினர்,**
**கல்வளைப் பிள்ளையார்**
**தேவஸ்தானம்.**

# இராசிபலன்

08.10.2023
புரட்டாதி 21 , ஞாயிற்றுக்கிழமை
நவமி பிற்பகல் 1.01 மணிவரை

பூசம் பின்னிரவு 05.49 மணிவரை
சுபநேரம் -9.02-10.32 மணிவரை
இராகுகாலம்-4.32-06.02 மணிவரை


சந்திராஷ்டமம்-
மூலம்

**வளவன்**




மேஷம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் மீதான பாசம் கூடும், விலை உயர்ந்த பொருட் களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுப பயணங்கள் கைகூடும்.



ரிஷபம்

தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்,தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.




மிதுனம்

குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், வழிபாடு காரிய வெற்றி தரும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக் கும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.




கடகம்

விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள், மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.




சிம்மம்

குடும்ப வேலைச் சுமையால் தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம், மாற்றங்களினால் ஏற்றம் காணும் நாள், திடீர் பயணமொன்று ஏற்படலாம்.




கன்னி

எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கிடைக்கும், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும் கௌரவமான நாள்.




துலாம்

தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள், குடும்பத்வர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல்நலனில் முன்னேற்றம் காணும் நாள்.




விருச்சிகம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள்.




தனுசு

குடும்ப பெரி யவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், காரிய வெற்றிக்கு இஷ்டதெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.



மகரம்

விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நினைத்த காரியம் நிறைவேறும் வாய்ப்புண்டு நண்பர்களால் வள ர்ச்சி கூடும், போசன சுகமுண்டு.



கும்பம்

எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு.



மீனம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள்.

முதியோர் இல்லத்திற்கு [illegible] பொருள், உணவு, உடை கொடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் வெளியேறியதை தொடர்ந்து
# தமது காணிகளுக்கு வேலி அமைக்கும் மக்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை, மாங்கொல்லை பகுதியில் இராணுவத்தினர் வெளியேறிய பிரதேசங்களில் உள்ள தமது காணிகளை அறிக்கைப்படுத்தும் நடவடிக்கைகளில் காணி உரிமையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 33 வருடங்களுக்கு மேலாக மாங்கொல்லை பகுதி இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. அந்நிலையில் கடந்த ஜூன் மாத காலப்பகுதியில் அப்பகுதியில் இருந்து நிலை கொண்டு இருந்த இராணுவத்தினர், அங்கிருந்து வெளியேறினர்.

இராணுவத்தினர் வெளியேறிய போதிலும் அப்பகுதி இர்ராணுவத்தினரால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படாததால் மக்கள் மீள் குடியேற முடியாத நிலைமை காணப்பட்டது.

அதனால் அப்பகுதி ஆட்களற்ற சூனிய பிரதேசமாக காணப்பட்டமையை திருட்டு கும்பல்கள் தமக்கு சாதகமாக அதனை பயன்படுத்தி வீடுகளை உடைத்து கதவு, ஜன்னல்கள், அதன் நிலைகள் மற்றும் இரும்புகள் என்பவற்றை களவாடி சென்றனர்.

இது தொடர்பில் பொலிஸார், பிரதேச செயலகம் என்பவற்றில் முறையிட்டும் திருட்டு கும்பல்களை கட்டுப்படுத்த முடியவில்லை.

அதனை அடுத்து தம்மை மீள்குடியேற தற்போது அனுமதிக்காவிடினும் எங்கள் காணிகளை எல்லைப்படுத்தி காணிகளை அறிக்கைப்படுத்த அனுமதிக்க வேண்டும் என கடிதம் மூலம் தெல்லிப்பழை செயலரிடம் கோரப்பட்டதை அடுத்து வேலி அடைப்பதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டன. அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து காணி உரிமையாளர்கள் தமது காணிகளை எல்லைப்படுத்தி வேலிகளை அடைத்து வருகின்றனர்.

அதேவேளை கடந்த 33 வருட காலமாக இராணுவ கட்டுப்பாட்டு பகுதியினுள் காணப்பட்ட மாங்கொல்லை ஞான வைரவர் ஆலய புனரமைப்பு பணிகளையும் அப்பகுதி மக்கள் முன்னெடுத்துள்ளனர்.

இராணுவத்தினர் எமது காணியில் இருந்து வெளியேறி 3 மாத காலத்திற்கு மேலாகியும் எமது சொந்தக் காணிகளில் மீள் குடியேற இன்னமும் அனுமதி கிடைக்கவில்லை. எனவே எம்மை மீள் குடியேற்ற சம்பந்தப்பட்ட தரப்புக்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-33-104)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கல்விசார் ஆய்வுமாநாடு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் கல்விசார் ஆய்வுமாநாடு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கோப்பாயில் கலாசாலை நிறுவப்படுவதற்கு பின்புலமாக இருந்த சேர்.பொன்.இராமநாதன் பெயரிலும் காரைநகர் ச.அருணாசலம் உபாத்தியாயர் பெயரிலும் இரு அரங்குகள் அமைக்கப்பட்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

மாநாட்டின் தொடக்க நிகழ்வு பொது அரங்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற் துறைத் தலைவர் கலாநிதி ஜெயலக்சுமி இராசநாயகம் தலைமையில் இடம்பெறும். இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி ஆய்வரங்கத் திறப்புரையையும் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் வாழ்த்துரையையும் வழங்குவர். (நி-33)

# ஒரு மாதத்திற்கு முன்னர் இரும்பு திருடியவர் கைது

(அராலி)

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரை கட்டிப் போட்டு விட்டு காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இரும்புகளை திருடிய இளைஞர் ஒருவரை நேற்று முன்தினம் இரவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறை நல்லிணக்கபுரம் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-104)



கண்டி கலஹா சிவபூமி ஆச்சிரம மாணவர்களின் சிறுவர்தின நிகழ்வு

# வங்கி உத்தியோகத்தரின் வீட்டிற்கு தீ வைத்து வாள்வெட்டுக்குழு அட்டகாசம்

## பல லட்சம் பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசம்





(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை மேற்குப் பகுதியில் நேற்று அதிகாலை வேளை வாள்வெட்டுக்குழுவொன்று வங்கி உத்தியோகத்தரின் வீட்டிற்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டுள்ளது.

அதிகாலை 1 மணியளவில் மோட்டார்சைக்கிளில் வந்த மூன்று பேர் அடங்கிய வாள்வெட்டுக் குழுவொன்று வங்கி உத்தியோகத்தரின் வீட்டு வளவுக்குள் நுழைந்து வெளிவிறாந்தையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், ஷோபா கதிரைகள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை தீயிட்டு எரித்ததுடன் வீட்டுக் கதவினை உடைத்துக் கொண்டு உள்நுழைந்தும் வாள் மற்றும் கைகோடரிகளால் பொருட்களை அடித்து சேதப்படுத்தியுள்ளது.

இதன்போது வீட்டில் இருந்தவர்கள் அறை ஒன்றிற்குள் பாதுகாப்பாக இருந்ததாகவும் வன்முறைக்குழுவின் இச் செயற்பாட்டால் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் நாசமாகியிருப்பதுடன் வீடும் பகுதியளவில் தீயில் எரிந்து சேதமடைந்துள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-30-33-104)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் யாழில் ஒருவர் கைது

(அராலி)

யாழ்ப்பாணம் பனிப்புலம் பகுதியில் வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெளிநாட்டு சிகரெட்டுக்களை வைத்திருந்த 33 வயதுடைய நபரொருவர் இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பனிப்புலம் அம்மன் கோவில் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டு வருகின்றனர். (நி-104)

# விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)


அகில இலங்கை சைவப்புலவர் சங்கமானது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்தவுள்ள சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பட்டங்களுக்கான பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

விண்ணப்பப்படிவங்களை இல 610 காங்கேசன் துறை இணுவில் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15.11.2023 ஆம் திகதிக்கு முன்னராக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்எனவும் விண்ணப்பப்படிவம் பெறல் உள்ளிட்ட மேலதிக தகவல்களுக்கு 077 719 7067 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சி.கா.கமலநாதன் தெரிவித்துள்ளார். (நி-30)

# சான்றுப்பொருளை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வாகன இலக்கம் WP BAK 8479 -வழக்கு இல AR/1144 123 ஐ கொண்ட வழக்கில் உள்ள சான்றுப் பொருளான வாகனத்தை குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 431(3) இன் பிரகாரம் சான்றுப்பொருளின் உரிமையாளர் யாராவது இருந்தால் தகுந்த அடையாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக் கொள்ளுமாறும் அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து 2 மாதங்களின் பின் எதுவிதமான முன்அறிவித்தல்களும் வழங்கப்படாது சான்றுப்பொருள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என்பதை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ந)



யாழ்ப்பாணம் வடமராட்சி ஹாட்லிக் கல்லூரியின் 185 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு பழைய மாணவர்களால் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகள் அகற்றும் பணிகள் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டன. பருத்தித்துறை நகரம் மற்றும் பருத்தித்துறை கடற் கரை ஓரம் ஆகிய பகுதிகளில் இந்த செயற்பாடுகள் இடம்பெற்றன. (படம்- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 410
Viber 076 636 3378



# நீதித்துறை மீது கை வைத்தால்...

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா பதவி விலகல் தொடர்பான விடயம் நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

உண்மையில் நீதித்துறை என்பது சுயாதீனமாக இயங்கக் கூடியது. அது அரசியல் மற்றும் தனிப்பட்ட தலையீடுகளின்றி செயற்பட்டாலே நாட்டில் சட்டம், ஒழுங்கு பாதுகாக்கப்படும்.

சட்டத்தை இயற்றும் பாராளுமன்றத்தினால் கூட நீதித்துறையை கட்டுப்படுத்துவது சாத்தியமற்ற ஒன்று.

சட்டம், ஒழுங்கைப் பாதுகாத்து நாட்டில் அமைதி நிலையை ஏற்படுத்தும் நீதித்துறையை கேள்விக்குறி யாக்கும் செயலே முல்லைத்தீவு நீதிபதி மீதான அழுத்தமும் அவர் மீதான தனிமனித விமர்சனமும் எனலாம்.

முல்லைத்தீவு நீதிமன்றினூடான குருந்தூர் மலை விவகாரம் பெரும் பிரளயத்தை ஏற்படுத்தும் என அரசாங்கம் கனவிலும் நினைத்திருக்காது.

தீர்ப்பை மாற்றியமைக்குமாறு நீதிபதிக்கு அழுத்தம் கொடுத்தனர் அதற்கு அவர் அடிபணியாது நீதியின் பால் செயற்பட்டதன் பின்னரே அவரையும் அவரின் நீதித்துறை சார்ந்த சேவையினையும் விமர்சிக்கத் தொடங்கினர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இதில் பாராளுமன்ற உறுப்பினரும் இனவாதியுமான சரத் வீரசேகர முதன்மை நிலையில் நிற்பதை நாம் கண்ணூடே காண முடிகிறது.

இலங்கையின் வரலாற்றில் என்றும் நடந்தேறாத ஒரு செயல் தற்போது நடந்திருக்கிறது.

நீதித்துறை சார்ந்த பலர் தமது பதவிகளைத் துறந்துள்ளனர் ஆயினும் அழுத்தம் காரணமாகவோ, விமர்சனம் காரணமாகவோ எவரும் தமது பதவியைத் துறக்கவில்லை என்பது நிதர்சனம்.

பாராளுமன்றிலும் பாரளுமன்றிற்கு வெளியிலும் முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவையும் அவரின் நீதித்துறை சேவையையும் கடுமையாக விமர்சித்தவர் இனவாதி சரத்வீரசேகர.

நீதிபதிக்கு மனநலம் பாதித்து விட்டது. அவர் மனநல வைத்தியரை அனுகி சிகிச்சை பெறவேண்டும் என்ற சரத் வீரசேகரவின் பேச்சு தமிழர் மத்தியில் பெரும் கொதிநிலையை ஏற்படுத்தியிருந்து.

அன்று பாராளுமன்றில் சரத்வீர சேகர நீதித்துறையை விமர்சிக்கும் போது தக்க நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று நிலை இவ்வாறு இருந்திருக்காது.

ஆனால் சரத்வீர சேகர இப்போது பேசும் பேச்சுக்கள் வேடிக்கை மிகுந்ததாய் இருக்கிறது.

நான் நீதித்துறையை விமர்சித்தேனா? நீதிபதிக்கு அழுத்தம் கொடுத்தேனா? என்றவாறு இப்போது பேசுகிறார் சரத்வீர சேகர.

வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்களுக்கு வதிவிட அனுமதியை பெற்றுக் கொடுப்பதற்காகவே நீதிபதி சரவண ராஜா பதவி விலகினார் என்று நாகூசாமல் பேசியவர் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.

நீதிபதி பதவி விலகல் விவகாரம் இப்போது நாடளாவிய ரீதியில் பெரும் பேசுபொருளாக மாறியிருக்கும் நிலையில் பேச்சை மாற்றத் தொடங்கிவிட்டார் சரத்வீரசேகர என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஏனெனில் நீதிபதியின் பதவி விலகலுக்கு நீதிகோரி வடக்கில் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் முல்லைத்தீவு நீதிமன்றம் முற்றாக முடங்கும் வகையில் முல்லைத்தீவு சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

தவிர, தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து பாரிய கடை அடைப்பு போராட்டம் ஒன்றிற்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார்கள்.

ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றாய்த் திகழும் நீதித்துறையையும் அதன் ஸ்திரத்தன்மையையும் கேள்விக்குறியாக்கியுள்ள அரச தரப்பின் செயற்பாடுகள் உடன் நிறுத்தப்பட வேண்டு.

அழுத்தங்கள் பிரயோகிப்பதனூடாக தாம் நினைத்ததைச் சாதிக்கக் துடிக்கும் ஆதிக்க சக்திகளின் குரல் வளை நசுக்கப்பட வேண்டும்.

நீதியை நீதியின் பால் சுயாதீனமாக செயற்பட இடமளிக்க வேண்டும்.

இல்லையேல் நாடு குழப்பமடையும் அந்தக் குழப்பத்தைப் பயன்படுத்தி குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கத்துடிக்கும் இனவாதிகள் மீண்டும் இனமோதலைத் தூண்டி விடுவார்கள். இது இலங்கைத் திருநாட்டின் அழிவுக்கு வழிவகுக்கும்.

நீதித்துறைமீது எவரும் கைவைக்கக்கூடாது. மீறிக் கைவைத்தால் என்ன நடக்கும் என்பதை நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆதிக்க சக்திகளுக்கு வேண்டும்■

> “அழுத்தங்களை பிரயோகிப்பதனூடாக தாம் நினைத்ததைச் சாதிக்கக்துடிக்கும் ஆதிக்க, இனவாத சக்திகளின் குரல் வளை நசுக்கப் பட வேண்டும்.”

அபிமன்யு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் கங்காணி கார்த்திகேயனைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

மூப்பர்:- அது சரி, எங்க இன்னும் கங்காணியாரைக் காணவில்லை. ஏதேனும் உடல் நலக் குறைவோ.

(இவ்வாறு மூப்பர் விசாரிக்க, அந்நேரம் பார்த்து கங்காணி கார்த்திகேயன் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.)

சிறாப்பர்:- இந்தா கங்காணியார் வந்திட்டார். கங்காணியார் என்ன சங்கதி? இன்றைக்கு லேற்றாப் போனியள்.

கங்காணியார்:- என்ர மகன்ர குடும்பம் கனடாவுக்குப் போகுதல்லோ. அது தான் பேரப்பிள்ளைகள் படிக்கிற பள்ளிக்கூடங்களுக்குப் போய் கடிதம் வாங்கிக் கொண்டு வாறன்.

பண்டிதர்:- என்ன? மகன்ர குடும்பம் கனடாவுக்குப் போகுதோ. ஒரே ஒரு பிள்ளை. அதையும் கனடாவுக்கு அனுப்பிப் போட்டு என்ன செய்யப் போறியள்.


(பண்டிதர் பரமலிங்கம் எழுப்பிய கேள்வி கங்காணியாரை மௌனமாக்கியது.)

கங்காணி:- என்ன செய்யிறது. எங்கட காலம் முடிஞ்சு போச்சுது.

இனி அதுகளின்ர காலம். இந்த நாட்டிலும் வாழ முடியல்ல. நாளுக்கு நாள் பொருட்கள் விலையேறிக் கொண்டே போகுது.

இந்த நிலையில ஒற்றை அரச உத்தியோகத்தில இருந்துகொண்டு என்னெண்டு சீவியம் நடத்துறது.

விதானையார்:- ஓ! பிள்ளைகளைப் பெற்று அவையளை வெளிநாடுகளுக்கு அனுப்பிப் போட்டு நாங்கள் கைதடியிலும் சிவபூமியிலும் தஞ்சமடைய வேண்டியது தான்.



## இளம் ஆட்கள் வெளிநாடு போனால் முதியவர்கள் நாம் என்ன செய்யிறது

மூப்பர்:- ஏன்? விதானையார் வெளிநாடுகளில இருக்கிற எங்கட முதியவர்களையும் அங்க இருக்கிற காப்பகங்களில தானே கொண்டு போய் விடுகினமாம்.

விதானையார்:-அது வேற கதை. எங்கட வாழ்வு என்பது பாட்டன்-பாட்டி, தாய்-தந்தை, சகோதரங்கள், ஊர்-உறவு என ஒரு பெரிய கட்டமைப்பைக் கொண்டது.

ஆனால் வெளிநாட்டு வாழ்க்கை வித்தியாசமானது. அவர்களிட்ட குடும்பக் கட்டமைப்புக் கிடையாது. பிள்ளைகளை அரசாங்கம் கவனிக்கும். தாய், தந்தையர் பிரிந்து போய் தங்களுக்கு விருப்பமான இன்னொரு பாட்னரைத் தெரிவு செய்யலாம்.

ஆகையால, வெளிநாடுகளில குடும்ப ஒழுக்கம் என்பது முதன்மைக்குரிய விடயமல்ல.

மாறாக எங்கட தமிழ் பண்பாட்டில குடும்ப ஒழுக்கமும் குடும்பக் கட்டுமானமும் தான் மிகவும் முக்கியமானது.

வாத்தியார்:- வெளிநாடுகளுக்குப் போய் உழைச்சுக் கொண்டு இஞ்ச வந்தினம் எண்டால் நல்லது. ஆனால் எங்கட பிள்ளைகள் வெளிநாடுகளுக்குப் போய் அங்க நிரந்தரமாக இருக்கிறதையல்லோ விரும்புகினம்.

சிறாப்பர்:- என்ன இருந்தாலும் இளம் பிள்ளைகள் வெளிநாடுகளுக்குப் போனால், முதியவர்களும் ஏலாதவர்களும் தான் இந்த மண்ணில மிஞ்சுவினம்.

அதோட முதியவர்களுக்கு உரிய பராமரிப்புக் கிடைக்கவில்லையெண்டால், அவர்களும் நேர காலத்தோட இந்த மண்ணை விட்டுப் போறதுதானே. (சிறாப்பர் சோகத்தோடு கூற, ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.)

வாத்தியார்:- அடுத்த ஞாயிற்றுக் கிழமை 15 ஆம் திகதி தரம் ஐந்து மாணவர்களின்ர புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறப் போகுது.

பொதுவில தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் மாதத்தில நடைபெறுகிறதால மழை, தண்ணீர் எண்ட பிரச்சினை இருப்பதில்லை.

ஆனால், 2023 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, ஒக்டோபர் மாதம் நடப்பதால மழை, வெள்ளம் எண்ட பிரச்சினை ஏற்படும்.

பொதுவில எங்கட பள்ளிக்கூட மண்டபங்களில மழை ஒழுக்கு சர்வ சாதாரணம் தானே.

இந்த நிலையில, சின்னப் பிள்ளைகள் எழுதுகிற பரீட்சை என்பதால, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்கள் செய்ய வேணும்.

பண்டிதர்:- வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. மழை காலம் எண்டால், பரீட்சை மண்டபங்கள் இருட்டாக இருக்கும். ஆகையால அது தொடர்பில கவனம் செலுத்த வேணும்.

அதோட ஓடாத மணிக்கூடுகளை மண்டபங்களில பொருத்தி விட, அந்த மணிக்கூட்டில இருக்கிற நேரத்தைப் பார்க்கிற பிள்ளைகள் நேரம் இன்னும் இருக்குது எண்டு நினைக்கிற நிலமையோ அல்லது நேரம் போய் விட்டது எண்டு ரென்சன் படுகிற நிலைமையோ ஏற்படலாம்.

ஆகையால சரியான நேரத்தைக் காட்டக்கூடியதான மணிக்கூடுகளை பரீட்சை மண்டபங்களில பொருத்துறது கட்டாயம்.

இது தொடர்பான விடயங்களைப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் நிச்சயம் கவனிக்க வேணும்.

இவ்வாறு பண்டிதர் பரமலிங்கம் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நீதிபதி விடயத்தில் பிக்குகள் பேசாமல் இருப்பது ஏன் என்று புரியவில்லையே வியாசரே?
> தமிழ்- யாழ்ப்பாணம்

> தளபதி விஜயின் லியோ ரெயிலர் பார்த்தீர்களா? எப்படி இருக்கிறது?
> ரி.எக்ஸ்.எம்- யாழ்ப்பாணம்




**பிரபா- அத்தியடி**

**இந்த வார இறுதியில் பிறந்த நாள் கொண்டாடும் ரஷ்ய ஜனாதிபதி புடின் அணுகுண்டுப் போருக்குத் தயாராகின்றாராமே?**

உலகின் மிகப் பலம் பொருந்திய நாடான ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுத்ததற்குப் பின்னர் தனது பலத்தையும் நன்மதிப்பையும் இழந்து விட்டது என்பதே உண்மை.
அந்தளவிற்கு ஒரு சிறிய நாடான உக்ரைனிடம் அடிவாங்கத் தொடங்கி விட்டது.
அத்துடன் வட கொரிய ஜனாதிபதியைச் சந்தித்த விடயம் புடினின் பலத்தை இன்னும் குறைத்திருக்கின்றது என்றே கூற வேண்டும்.
உலக வல்லரசு ரஷ்யா தோல்விகளைத் தாங்க முடியாமல் அணுகுண்டுப் போரை தொடுக்குமாக இருந்தால் இந்த உலகம் அழிவைச் சந்திப்பது மெய்.

**தமிழ்- யாழ்ப்பாணம்**

**நீதிபதி விடயத்தில் பிக்குகள் பேசாமல் இருப்பது ஏன் என்று புரியவில்லையே வியாசரே?**

கடலுக்கு மேல் தெரியும் பனிப் பாறை சிறியதாகத் தெரியும். ஆனால் அது கடலுக்குக் கீழ் பல ஆயிரம் மடங்கு பெரிதாகவே இருக்கும்.
இங்கும் அது தான். நீதிபதியை பதவி விலகச் செய்தவர்கள் வெளியில் தெரியும் பனிப்பாறை என்றால் பிக்குகள் கடலுக்கு அடியில் மறைந்திருக்கும் இராட்சத பாறைகள்.
இதைப் புரியாமல் அமைதியாக இருக்கிறார்கள் என்று கற்பனைக் கோட்டையைக் கட்டிவிடாதீர்கள்.
பிறகு அதில் டைட்டானிக் கப்பல் மோதிவிடும் தம்பி.

**திகான்- வடமாராட்சி**

**ஐந்து நிமிடங்களில் பேசி முடிப்பதை அரைமணித்தியாலமாக இழுப்பவர்கள் ஆளுமையுள்ளவர்களா வியாசரே?**

சொல்லவந்த விடயத்தை நறுக்காக சொல்லி முடிப்பது பட்டிமண்டபம். சொல்ல வந்த விடயத்தை இழு இழு என இழுத்து நீட்டி விடிய விடிய சொல்லிக் கொண்டே இருப்பது கதா பிரசங்கம்.
பட்டிமண்டபம் போல சொல்லவந்ததை நாம் நறுக்காக சொல்லப் போகிறோமா? அல்லது கதாபிரசங்கம் போல இழுக்கப் போகிறோமா என்பது எமது கையிலேயே உள்ளது.அந்த ஆளுமையை வளர்க்க வேண்டியது தனி மனித திறமை.அதை வேறு எவரிடமும் இருந்து கற்றுக் கொள்ள முடியாது. அவ்வளவுதான்.

**சுதன் -குப்பிழான்**

**அந்தக்கால கர்த்தால்கள் போல இந்தக்கால கர்த்தால்கள் வெற்றி பெறவில்லையே வியாசரே?**

கண்டதற்கு எல்லாம் போராட்டங்களையும் தொட்டதற்கெல்லாம் கர்த்தால்களையும் வைத்தால் அது ஒரு நாளும் வெற்றி பெறாது என்பதை ஏன்தான் எம்மவர்கள் புரிந்து கொள்கிறார்கள் இல்லை.
கர்த்தால், கடையடைப்பு என்பது எப்பேற்பட்ட தாக்கத்தை ஏற்படுத்த வல்லது என்பதைப் புரியாமல் கடை அடைப்புக்கு அழைப்பு விட்டு விட்டு அவர்கள் வீட்டில் முடங்கிவிடுவார்கள்.
வியாபாரிகள் பத்துமணிவரை கடையைச் சாத்தி வைத்துவிட்டு அதன் பின் திறந்து விடுவார்கள்.
இதைப் பார்த்து என்னத்தால் சிரிப்பார்கள் தெரியுமா?அதுசரி போராட்டங்களை ஒழுங்குபடுத்துபவர்க்கு இதுகள் தெரிஞ்சால்தானே வெக்கம் வாறதுக்கு.

**ரி.எக்ஸ்.எம்- யாழ்ப்பாணம்**


**தளபதி விஜயின் லியோ ரெயிலர் பார்த்தீர்களா? எப்படி இருக்கிறது?**

விஜய், லோகேஸ் இணையும் படம் என்பதனால் லியோ மீது அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.
ரெயிலரில் விஜய் மிரட்டி இருக்கிறார்.இரண்டு வேடங்கள் ஒவ்வொன்றும் தனித்துவமாகத் தெரியும் படி தனது நடிப்பில் மெருகேற்றி இருக்கிறார் விஜய்.
இதைவிட அர்ஜீன், மஞ்சூர் அலிகான், சாண்டி, விஜய் தத்தா என பெரிய நடிகர்கள் பட்டாளம்.
நிச்சயம் தமிழ் சினிமாவில் வசூல் ரீதியில் மிகப் பெரிய சாதனை படைக்கும் லியோ. அதில் சந்தேகம் ஏதும் இல்லை.

**மதுவன் -மீசாலை**

**நீதிபதியே நாட்டைவிட்டு வெளியேறுகிறார் எனின் சாதாரண மக்களின் நிலை எப்படிப்பட்டது வியாசரே?**

இந்த நாடு சிங்கள பௌத்த நாடு. இங்கு அவர்கள் வைத்தது தான் சட்டம்.
அவர்கள் சட்டத்தை விமர்சிக்கலாம் சட்டத்தை மாற்றி அமைக்கலாம்,சட்டத்தைக் கையில் எடுக்கலாம் அதற்கு எந்த தண்டனையும் இல்லை.சிறுபான்மை இனமாகிய நாம் ஏதாவது விடயத்தை வாய் தவறிக் கூடப் பேசிவிடக் கூடாது. அப்படிப் பேசிவிட்டால் கதை முடிந்தது.
ஒரு நீதிபதியையே விமர்சித்து, அவரின் தீர்ப்புகளை விமர்சித்து, அவரின் தனிமனித பண்புகளுக்கு கழங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து அவரை பதவிவிலக வைத்தவர்களுக்கு தண்டனை ஏதும் இல்லை. அவர்கள் இப்போதும் பாராளுமன்ற உறுப்பினராகவே இருக்கின்றனர்.



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 076 097 3126 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

பாடகர்: டி எம் சௌந்தரராஜன்
வரிகள்: கண்ணதாசன்
இசை: எம் எஸ் விஸ்வநாதன்
திரைப்படம்: வசந்த மாளிகை



*எழுதுங்கள். என் கல்லறையில்
அவள் இரக்கம்
இல்லாதவள் என்று
பாடுங்கள் என் கல்லறையில்
இவன் பைத்தியக்காரன் என்று*

யாருக்காக இது யாருக்காக
இந்த மாளிகை வசந்த மாளிகை

காதல் ஓவியம் கலைந்த மாளிகை
யாருக்காக இது யாருக்காக

மரணம் என்னும் தூது வந்தது
அது மங்கை என்னும் வடிவில் வந்தது

சொர்கமாக நான் நினைத்து
இன்று நரகமாக மாறிவிட்டது

யாருக்காக இது யாருக்காக
இந்த மாளிகை வசந்த மாளிகை

காதல் ஓவியம் கலைந்த மாளிகை
யாருக்காக இது யாருக்காக

கண்கள் தீண்டும் காதல் என்பது
அது கண்ணில் நீரை வரவழைப்பது

பெண்கள் காட்டும் அன்பு என்பது
நம்மை பித்தனாக்கி அலையவைப்பது

எழுதுங்கள் என் கல்லறையில்
அவள் இரக்கம் இல்லாதவள் என்று

பாடுங்கள் என் கல்லறையில்
இவன் பைத்தியக்காரன் என்று

யாருக்காக இது யாருக்காக
இந்த மாளிகை வசந்த மாளிகை

காதல் ஓவியம் கலைந்த மாளிகை
யாருக்காக இது யாருக்காக

# பிறரைச் சார்ந்திருப்பதும் பிராண சங்கடமே

இந்த உலகத்தில் தனியாக வந்து பிறந்த நாம் ஒரு காலத்தின் பின்பு இந்த உலகத்தை விட்டு தனியாகத்தான் செல்ல வேண்டும் என்பதை கருத்தில் கொண்டால் நம் வாழ்நாளில் நாம் எவரையும் சார்ந்திருக்கத் தேவையில்லை.

வாழ்க்கையில் ஒரு சிறு விடயங்களுக்காக கூட நாம் பிறரை சார்ந்திருப்பது ஒரு பிராண சங்கடத்துக்குள் நம்மை தற்காலிகமாய் உட்படுத்தி விடும் என்பதே நிஜமாகும்.

உலக வாழ்க்கையில் உன்னைத் தவிர உனக்கு யாரும் உதவ முன் வர முடியாது இதுவே மனித கர்மாவின் மிகப் பெரும் விதியாகும். இதை மனப்பூர்வமாக உணர்ந்து கொண்டால் மட்டுமே உன்னை உன்னால் ஜெயித்துக்காட்ட முடியும்.

நீ இந்த உலகத்தின் மனித சமூகத்தை ஒவ்வொரு விநாடியும் சார்ந்திருக்கும் வரை அவர்கள் உன்னை ஒருபோதும் சுதந்திரமாக வாழ அனுமதிக்க மாட்டார்கள். இதுவே பல உயர்நிலை மனிதர்கள் தம் வாழ்நாளில் கண்டு தெளிந்த கசப்பான அனுபவங்களாகும்.

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் பிறரைச் சார்ந்திருப்பதன் பாதிப்பானது எந்தளவுக்குச் சென்று விடுமெனில் பிறரின் மனவோட்டத்துக்கு அமைய தனது விருப்பங்களை அவன் தியாகம் செய்யும் அளவுக்கு என்று சொல்லி விடலாம்.

பொய்யிலிருந்து உண்மையை தெளிவாக உணரும் வரை. இருளில் இருந்து ஒளியை நோக்கி ஈர்க்கும் வரை. நீ உன் சுயத்தை பூரணமாக உனக்குள் உணரும் வரை. நீ இந்த உலகத்தில் பிறரைச் சார்ந்திருக்கும் தேவை நிச்சயமாய் உனக்கு அதிகமாக இருக்கத்தான் செய்யும்.

கீழ்மாடி என்ற உன் சரீர உணர்விலிருந்து இருந்து மேல்மாடி என்ற உன் ஆன்ம தத்துவ நிலைக்கு நீ விண்ணளவு உயர்ந்து விட்டால் நீ எவரையும் இவ்வுலகில் சார்ந்திருக்கவே தேவையில்லை.

தன் இறுதிக்கடனைத் தீர்க்க தன் புதல்வர்களைக் கூட சார்ந்திருப்பது ஒருவகை சுயநலமென்று முற்றும் அனுபூதியில் உணர்ந்த ஞானிகளின் தத்துவ நிலைப்பாடாய் இருக்கையில் நாம் பிறரை சார்ந்திருப்பதானது அறியாமையின் வெளிப்பாடாகும்.


பிறரை சார்ந்திருக்காமல் இவ்வுலகில் வாழப் பழகுவது ஒரு துறவி தன் வாழ்நாளில் கடைப்பிடிக்கும் உயர்ந்த நிலைப்பாடுகளில் ஒன்றாகும். இதை எம் மனமானது தனக்குள் பக்குவப்படுத்தி கொண்டால் ஒரு பற்றற்ற வாழ்க்கைக்கு இது வழி செய்துவிடும்.

பிறரை ஒரு விநாடி கூட. சார்ந்திருக்காமல் வாழப் பழகும் ஆழ்ந்த சத்தியத்தின் நுட்பத்தை ஒவ்வொருவரும் தம் வாழ்நாளில் உணர வேண்டுமானால் "நான் இறைவனுக்கு மட்டுமே சொந்தம். ஆனால் இறைவன் எல்லோருக்கும் சொந்தம்" என்ற கடினமான தத்துவ நிலையில் மனம் ஊன்றி நின்றால் மட்டுமே பிறரை சார்ந்திருக்கும் நிலையில் இருந்து ஓரளவாவது தப்பித்துக் கொள்ளலாம்.

ஒரு மனிதன் தன் மீது வைக்கும் நம்பிக்கையை இறைவன் மீது வைப்பதும் இறைவன் மீது வைக்கும் நம்பிக்கையை தன் மீது வைப்பதும் பிறரைச் சார்ந்திருக்கும் எண்ணத்திலிருந்து அவனை முற்று முழுதாக அகற்றி பரிபூரண ஆன்ம ஆனந்த நிலைக்கு அவனை நிச்சயம் அழைத்துச் செல்லும் என்பதில் எந்த ஐயமும் கிடையாது.

**சாம் – ரமேஸ்குமார்.**

**'நான் இறைவனுக்கு மட்டுமே சொந்தம். ஆனால் இறைவன் எல்லோருக்கும் சொந்தம்' என்ற கடினமான தத்துவ நிலையில் மனம் ஊன்றி நின்றால் மட்டுமே பிறரை சார்ந்திருக்கும் நிலையில் இருந்து ஓரளவாவது தப்பித்துக் கொள்ளலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய்க் குளியல்... ஏன், எப்படி, எப்போது?



நோய்களைத் தீர்ப்பதோடு, நோய் வராமல் வருமுன் காப்பது சித்த மருத்துவத்தின் தனிச்சிறப்பு. அவ்வகையில் வருமுன் காக்க, சித்தர்களால் அருளப்பட்ட வரப்பிரசாதமே நோய் அணுகா விதிகள். அவ்விதிகளில் ஒன்றாக, நம்முடைய நோயற்ற, நலமான வாழ்வுக்காகச் சித்தர்கள் கூறிய ஒன்றே எண்ணெய் முழுக்கு. அதாவது, எண்ணெய்க் குளியல். வாரம் இருமுறை எண்ணெய்க் குளியல் செய்ய வேண்டும் என்று சித்தர்கள் கூறியுள்ளனர்.

இன்றைய சூழலில் உணவாலும் செயல்களாலும் சுற்றுச்சூழல்களாலும் உடல் சூடு மிகவும் அதிகரிக்கிறது. அதன் காரணமாகப் பல நோய்கள் ஏற்படுகின்றன. இந்த உடல் வெப்பத்தைக் குறைக்க அருமையான ஒரு வழிமுறைதான் எண்ணெய்க் குளியல். பயணம் மேற்கொள்ளும் நாட்களில் எண்ணெய்க் குளியலைத் தவிர்க்கலாம்.

**'எண்ணெய் பெறின், வெந்நீரில் குளிப்போம்' என்ற சித்தர்களின் வாக்குப்படி, மிதமான சூடுள்ள வெந்நீரில் குளிக்க வேண்டும். தலை தேய்க்க ஷாம்பூகளைப் பயன்படுத்தா மல் சிகைக்காயின் தூளைப் பயன்படுத்துவது நல்லது.**

சித்த மருத்துவத்தில் நோய்களுக்குத் தக்கபடி, பருவ காலங்களுக்குத் தக்கபடி பல எண்ணெய்கள் சொல்லப்பட்டிருந்தாலும் எண்ணெய் முழுக்கிற்குத் தகுந்த, உகந்த எண்ணெய், நல்லெண்ணெய் எனப்படும் எள் எண்ணெய்தான்.

சூரிய உதயத்தில், அதாவது ஆறு மணியிலிருந்து, எட்டு மணிக்குள் தேய்ப்பது மிகவும் நல்லது. தேய்த்த பின் அரை மணி நேரம் கழித்துக் குளிப்பதே நல்லது. இந்த அரை மணி நேரத்தில் பத்து நிமிடங்கள் சூரியக் குளியல் செய்வது மிக அவசியமானது. இதன்னால் உடலுக்குத் தேவையான விட்டமின் டி சத்து கிடைக்கும்.

'எண்ணெய் பெறின், வெந்நீரில் குளிப்போம்' என்ற சித்தர்களின் வாக்குப்படி, மிதமான சூடுள்ள வெந்நீரில் குளிக்க வேண்டும். தலை தேய்க்க, ஷாம்பூகளைப் பயன்படுத்தாமல் சிகைக்கான (முடிக்கான), சிகைக்காயின் தூளைப் பயன்படுத்துவது நல்லது. உடலுக்குக் கடலை மாவு, பச்சைப்பயறு மாவு, நலங்கு மாவு போன்ற ஏதாவது ஒன்றைத் தேய்த்துக் குளிக்கலாம்.

குளித்தாலும் மழையில் நனைந்தலும் தலையை நன்றாகத் துவட்ட வேண்டும். நன்கு துவட்டாததாலேயே நீரேற்றம், மூக்கடைப்பு, தலைவலி போன்ற சீதள நோய்கள் ஏற்படுகின்றன. எண்ணெய் முழுக்கு செய்த அன்று, எளிதில் செரிக்கக் கூடிய உணவுகளையே உண்ண வேண்டும்.

இவ்வாறு முறையாக எண்ணெய் தேய்த்துக் குளிப்பதனால், உடல் வெப்பம் வெளியேறி, உடல் மற்றும் கண்கள் குளிர்ச்சி அடையும். உச்சி முதல் பாதம் வரை வலிமை அடையும். பஞ்சேந்திரியங்களும் பலம் பெறும். புத்தித்தெளிவு, நல்ல குரல் வளம், முடி வளர்ச்சி, தோல் மினுமினுப்பு போன்ற பல பயன்கள் உண்டாகும். இத்தனை பயன்களை அள்ளித் தரும் எண்ணெய்க் குளியலை, நாம் ஒவ்வொருவரும் வாரம் ஒரு முறையாவது தவறாமல் மேற்கொண்டு, அதன் பலன்களைப் பெறுவோம். நோய்கள் வராமல் காப்போம்.

# நீ என் ஊழியராக இருந்திருந்தால்

**"நான் உங்கள் மனைவி. ஊழியர் அல்ல" என்று மஸ்கிடம் திரும்பத் திரும்ப சொன்னேன். அதற்கு அவர் "நீ என் ஊழியராக இருந்தால் நான் உன்னை பணிநீக்கம் செய்திருப்பேன்" என்று அடிக்கடி கூறினார் என்று எழுதி யிருக்கிறார்.**



கடந்த வாரம் எலான் மஸ்க்கின் வாழ்க்கை வரலாறு நூல் வெளியான நிலையில், எலான் மஸ்க்கின் முதல் மனைவி ஜஸ்டின் மஸ்க் பல வருடங்களுக்கு முன்பு எழுதிய கட்டுரை ஒன்று தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

எழுத்தாளரும் ஐந்து மகன்களின் தாயுமான ஜஸ்டின் மஸ்க், 2010 இல் மேரி கிளாரி பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில், எலான் மஸ்க் உடனான தன் திருமணம் குறித்தும் அது எப்படி சோகமாக மாறியது என்பதும் குறித்தும் விபரித்திருந்தார்.

"நாங்கள் திருமண வரவேற்பில் நடனமாடியபோது", "இந்த உறவில் நான்தான் ஆல்பா" என்று எலான் என்னிடம் கூறினார். ஆனால் நான் அதைப் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, அவர் தீவிரமானவர் என்பதை அறிந்தேன். தென்னாபிரிக்காவின் ஆணாதிக்கக் கலாசாரத்தில் வளர்ந்தவர் எலான் மஸ்க்.

மஸ்க்கின் இந்தக் குணமும் எங்களிடையே இருந்த பொருளாதார ஏற்றத்தாழ்வும் திருமணமான சில மாதங்களிலேயே மனஸ்தாபங்களை எங்களுக்குள் ஏற்படுத்தியது. அவருடைய கருத்துகள் என்னுடைய முடிவின் மீது ஆதிக்கம் செலுத்தியது. மேலும் என்னைத் தொடர்ந்து குறைகூறிக் கொண்டே வந்தார். செப்டெம்பர் 2008 இல் இந்த ஜோடி விவாகரத்து பெற்றது.

# வேகம் விவேகமல்ல!

விபத்து என்பது கண்ணிமைக்கும் நொடிப் பொழுதில் ஏற்படுவதே. மனித வாழ்வில் விபத்துக்களைத் தடுப்பதென்பது சாத்தியமற்ற ஒன்று.

ஆயினும் விபத்துக்களைக் கட்டுப்படுத்தவல்ல நுட்பம் மனிதனிடமே காணப்படுகின்றது.

விபத்துக்கள் என்று கூறும் போது வீதி விபத்துக்களே முன்நிற்கும். அந்தளவிற்கு வீதி விபத்துக்களில் மரணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது.

இதில் வடக்கின் நிலையே மிக மோசம் எனலாம். அந்தளவிற்கு வீதி விபத்துக்களால் யாழ்.போதனா வைத்திய சாலை நிறைந்து வழிகிறது.

இந்த விபத்துக்களுக்கான காரணத்தை நோக்கினால் அதிவேகம் என்பதே முடிவாகும்.

விபத்தில் இளம் உயிர்கள் அநியாயமாக பிரிவதென்பதை ஒரு நாளும் ஏற்க முடியாது.

வீதியில் அதிவேகமாக பயணிக்கும் வாகனங்களை தடுத்து நிறுத்தி ஏன் அதிவேகமாகச் செல்கிறீர்கள் எனக் கேட்டால் அதற்கு நிச்சயம் அவர்களிடம் பதில் இருக்காது.

இங்கு சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளும் பொறுப்புடன் நட ந்து கொள்ள வேண்டும்.

ஒருவருக்கு எவ்வளவு சீக்கிரத்தில் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுத்தர முடியும் என்ற சிந்தனையை மாற்றி சரியான பயிற்சி, வீதி விதிகளை முற்றாக அறிந்து கொள்ளல், அதன் படி வாகனத்தைச் செலுத்தும் திறன் இருந்தால் மாத்திரமே குறித்த நபருக்கு வாகன சாரதி அனுமதியைப் பெற்றுக் கொள்ள ஆவண செய்ய வேண்டும்.

விடுத்து, எம்மிடம் வந்தால் சாரதி அனுமதிப் பத்திரம் விரைவாகவும் இலகுவாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்ற பரப்புறையை நிறுத்துவது ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க துணைநிற்கும்.

அநேகர்களுக்கு வீதியில் இருக்கும் குறியீடுகள் எதற்காக இடப்பட்டுள்ளது என்பதே தெரியாது. ஆனால் அவர்களிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கிறது. இப்படிப் பட்டவர்களே வீதியில் கண், மண் தெரியாமல் வேகமாக வாகனங்களை ஓடு பவர்களாகவும் இருக்கிறார்கள்.

யாழ்.மாவட்டத்தில் வீதிச் சமிக்ஞை விளக்குகள் மிகக் குறைந்த இடங்களிலேயே பொருத்தப்பட்டுள்ளது.

ஆனால் அவ்விடத்தில் யாரும் பொறுமையாய் நிற்பதாய்த் தெரியவில்லை.

பொலிஸார் நின்றால் வீதி விதிகளை மதிப்பது. அவர்கள் இல்லை என்றால் அதை மிதிப்பதுமே எம்மவர்களின் நடைமுறை.

ஒரு தவறு நடப்பதற்கு முன் அந்தத் தவறைத் தடுப்பதே சட்டத்தின் கடமை. ஆனால் தவறை நடக்க விட்டு விட்டு அதற்கு தண்டம் விதிப்பது எந்த வகையிலும் ஏற்புடையதாய் ஆகாது.

இதை பொலிஸாரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

யாரில் சரி, யாரில் பிழை என்பதற்கு அப்பால் வீதி விபத்துக்களில் சிக்கி மாண்டு போனவர்கள் எத்தனை ஆயிரம் பேர்.

அவர்களை நினைத்து மனம் நொந்து நடை பிணமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்கள் எத்தன்னை.


இவை அத்தனையும் விபத்து என்ற அரக்கனால் ஏற்பட்ட விளைவே.

வீதி விதிகளை மதித்து,அதி வேகத்தைத் தவிர்த்து, வாகனம் செலுத்தினால் அநியாயமாய் பல உயிர்கள் பலிகொள்வதைத் தடுக்கலாம்.

"வேகம் ஒரு நாளும் விவேகமல்ல" "அதிவேகம் மரணத்தின் எல்லை"

மாவை.நா.கஜேந்திரன்

**எம்மிடம் வந்தால் சாரதி அனுமதிப் பத்திரம் விரைவாகவும் இலகுவாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்ற பரப்புறையை நிறுத்துவது ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க துணைநிற்கும்.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இனிமை காணும்

வாழும் வாழ்வில் மனிதம் என்றும்
நாளும் கோளும் பார்த்து துயரை
வீழ்த்தி வைத்து வாழும் வாழ்வை
வாழ வேண்டி என்றும் நிலைக்கும்

பகைமை கொண்ட மனிதம் என்றும்
உயர்வு கண்டு வாழக் கூடும்
வலிமை பெற்ற மனிதம் என்றும்
இனிமையோடு வாழக் கூடும்

கயமை கொண்ட வாழ்வு மண்ணில்
உயர்வு கண்டு வாழ்தல் இல்லை
அயர்ந்து போன மனிதம் கேட்டில்
துயரடைந்து சோர்ந்து
வாழ வீழ்ச்சியாகும்

ஆசை கொண்டு வாழும் மனிதம்
ஓசையின்றி வீழ்ந்து மாழும் என்றும்
இசையில் மூழ்கி வாழும் மனிதம்
துயரை விரட்டி இனிமை காணும்



வளவை வளவன்.

## ஆசிரியர் தின வாழ்த்துக்கள்

சேவை குணமும் தாய்மை உணர்வும்
கொண்ட குருவிற்கு வணக்கம்

நான் யாரென்றும் பாராமல்
எந்த உறவென்றும் இல்லாமல்
உன் பிள்ளைகளுக்கு நிகராய்

பணிவோடு பேசி
பல அறிவு தந்திடுவாய்
குற்றம் தான் செய்திடினும்
குதற்கமாய் நடந்திடினும்
கனப் பொழுதில் கண்டித்திடுவாய்

காலங்கள் பல கடந்தாலும்
நான் வேறு திசை போனாலும்
மறவேன் உன் திருவதனம்


வாழ்த்திட வயதில்லை
இருந்தும் வாழ்த்துகிறேன்
குருவே வாழ்க!
சிறப்புற உன் பணி
வாழ்க நீ பல்லாண்டு



த.விஸ்பாத்,அச்சுவேலி ஆரம்ப பாடசாலை

## மாற்றங்களும் மாயையும்

சுதந்திரம் முலாம் பூசிய
தேசிய நாட்டு மக்கள் நாம்
ஐந்தாண்டுக் கொரு
ஆட்சி மாற்றங்களில்
வாக்கு உறுதிகளாக
இனிவரும் தீர்வென
மனப்பால் குடித்தே
தமிழினக் காத்திருப்பு
அடம்பன் கொடி திரண்டிட்
மிடுக்காம் நாம்
அணி சேர்வதில் இல்லையது
மாற்றங்கள் மாயையாகும்
ஏற்றங்கள் ஏமாற்றங்கள்
ஒற்றுமை கனவா நனவா?
விதியை நொந்தென்ன?
இனிவொரு விதி செய்வோம்
மாயை மறந்து



தமிழினியன் ,வவுனியா.

## மௌனத்தின் தேடல்- 689



## தந்தை

எத்தனை துன்பங்கள் எம் பக்கம் வந்திடினும்
அத்தனை துன்பங்களையும் பிள்ளைகள்
அறியா வண்ணம் தாங்கி அவர் தம்
நலனுக்காய் தன்னையே உருக்கி
வாழ்ந்திடினும் அவர் தம் மகிழ்ச்சியே
தன் மகிழ்ச்சியெனகண்ணுக்குள்
கருமணி போல் வைத்து
பாதுகாத்திடும் பாசமுள்ள பாதுகாவலன்

சி.மகாலட்சுமி,
கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்- 690



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## தியாகி தந்தை

வாழ்க்கை எனும் நெருப்புக்குள்
எம்மை வாட்டி விடாமல்
தன்மேல் வெம்மை ஏற்றி
எம்மை குளிர்வித்து
தன் வ்லி மறைத்து
எமக்காய் சிரிக்கும்
தியாகி தந்தை!
அவரின் உன்னதம் என்னவென்று
நாம் தந்தையான பின்பே
உணர்ந்து கொள்ள முடியம்

இ.உதிஸ்ரன் -கீரிமலை

## கட்சியும் காட்சியும்

தூர நின்று துயரத்தைத் தரும்
துப்பாக்கி ரவை போன்றது அம்பு
இங்கு வில் அம்பின் வலியை
விட விஞ்சுவது சொல்
அன்பின் வலிமையே
காற்றுள்ள போது தான்
தூற்றுவது என்றும் நன்றன்று
வசதி பதவி வாய்ப்பை பெருக்க
கட்சி மாறி முதுகில் குத்துவதும்
விதியின் மேல் பழிபோடுவதும்
அரசியலில் சகசமாகி விட்டது

க. நாகராசா,
நுணாவில்.

## வலிமை

சொல்லம்புகளாய் முதுகில் குத்திய
காயங்கள் முள்ளாய் வலிக்கும்
வேளைகளிலும் முன்னால் நின்று
வாஞ்சனையுடன் அப்பாவென
அழைக்கும் மகளின்அன்பான குரல்
அரவணைப்பில் உள்ளமுருகிடும் போது
பனித்துளியாய் பறந்திடும் வலிகள்
அதனால் கிடைத்திடும் சுகங்கள்
என்றும் வலிமை தரும்

பிறேமா தியா ,
யாழ்ப்பாணம்.

## உணர்ந்து கொள்

எம் கனவுக்காய் தன் முதுகில்
அம்பு வாங்கி நெஞ்சால்
எமக்கு அன்பைத் தரும் தந்தை
அமைந்து விட்டால் இந்தத் தரணியை
வென்று விடலாம் ஏனோ அது பல
தந்தையர்க்கும் புரிவதில்லை
தனையர்களும் உணர்வதில்லை

ஜீ.ஜிஷான் , சங்கானை.

## தாதை இவரே

வாழ்வின் இன்ப துன்பங்களோடு
தியாகங்கள் செய்து
ஏளனத்தையும் வேதனையையும்
சுமந்து முதுகில் குத்தும்
துரோகங்களையும் தாங்கி
இன்முகமாய் தன் பிள்ளைகள்
வாழ நேர் வழி செய்பவரே
நற் பிரசைகளை உருவாக்கும்
நல்லதோர் தந்தையாவார்

சி.இ. அன்புதுறை , மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்புறா

"எப்படித் தெரியும் உனக்கு?"

"என் மதி சொல்லுகிறது?"

என்ன சொல்லுகிறது உன் மதி?"

"இரண்டு நாடுகளின் வரலாறுகளின் சரித்திரச் சதுரங்கத்தில் நகர்த்தப்படும் காய் நான் என்று சொல்கிறது."

"சே! சே! எதையெதையோ கற்பனை செய்கிறாய்." என்று அவளைச் சாந்தப்படுத்தப் பார்த்தான் இளையபல்லவன்.

"வீணாக என்னைச் சாந்தப்படுத்தப் பார்க்காதீர்கள். நான் நன்றாக யோசித்துவிட்டேன். விதி என்னை வைத்துச் சரித்திரச் சதுரங்கத்தில் விளையாடப் பார்க்கிறது. விதி மட்டுமல்ல, மனிதர்களும் விளையாடப் பார்க்கிறார்கள்." என்று மஞ்சளழகி கூறிப் பெருமூச்சு விட்டாள்.

"மனிதர்களா!" என்று இளைய பல்லவன் வினவினான் குழப்பத்துடன்.

"ஆம், மனிதர்களுந்தான். முதலில் என் வளர்ப்புத் தந்தை விளையாடப் பார்க்கிறார்."

"இருக்காது" என்றான் இளைய பல்லவன். "இருக்காது" என்றான் இளைய பல்லவன்.

"இருக்கிறது இல்லாவிட்டால் உங்களை மணக்கச் சொல்லி எனக்கு யோசனை சொல்வாரா?" என்றாள் அவள் வெறுப்புடன்.

எதிர்பாராத விதமாக அவன் வீசிவிட்ட அந்த வெடி அவன் இதயத்தில் பேரிடியென விழுந்தது. அடியோடு திகைத்துப் போய் ஏதும் பேசச் சக்தியற்று நீண்டநேரம் மௌனம் சாதித்தான் இளையபல்லவன். மௌனத்தை மஞ்சளழகியே உடைந்தாள். "அதற்காக அஞ்சவேண்டாம் இளையபல்லவரே! என்னை மணம் புரிந்து கொள்ளும்படி நான் உங்களை வற்புறுத்தவில்லை.

என் வளர்ப்புத் தந்தை விஷயத்தில் நீங்கள் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும் என்பதற்காகவே உங்களுக்கு இதைச் சொல்கிறேன். உங்களுக்கு என்னை மணம் செய்வித்துக் கோட்டைப் பாதுகாப்பையும் உங்களிடம் ஒப்படைத்தால் ஸ்ரீ விஜயத்துக்கு லாபம் என்று என் வளர்ப்புத் தந்தை நினைக்கிறார். அதுவும் நேற்றைய விழாவின் நிகழ்ச்சிக்குப் பின் சூளு இனத்தின் பகை ஏற்படுமாகையால், அகூதாவின் உப தலைவர் உதவி ஸ்ரீவிஜயத்தின் கடற்படைக்கு இன்றியமையாதது என்றும் தந்தை நினைக்கிறார். நீங்கள் நிற்கமாட்டீர்கள்." என்றாள் மஞ்சளழகி தீர்க்க சிந்தனையுடன்.

"ஏனப்படி நினைக்கிறாய் மஞ்சளழகி?" என்றான் இளையபல்லவன் உணர்ச்சி உள்ளத்தில் அலை மோத.

"என் மதி அப்படித்தான் சொல்கிறது. "திடீரென அவர் நேற்றுதான் வந்தார் மஞ்சளழகி! வந்த அன்றே உன்னைத் தொட்டார். இந்த அலையுந்தான் உன்னைத் தொடுகிறது. தொட்டுவிட்டுப் போய்விடுகிறது. அவரும் அலை போலத்தான் மீண்டும் போய்விடுவார். நீ கடற்கரை அவர் அலை. ஆனால்



காலத்தின் பதிவு 80

## சதுரங்கக் காய்கள்

ஒரு வித்தியாசம் உண்டு. அலை மோதுவதில் கடற்கரையில் வடு ஏற்படுவதில்லை. உன் 'மனத்தில் காயமும் காயத்தின் விளைவாக நிரந்தர வடுவும் ஏற்படும். வந்திருப்பவர் வீரர், மாதரை விட நாட்டை அதிகமாக மதிப்பவர். உன்னைத் தொட அவர் இங்கு வரவில்லை.

கலிங்கத்தின் கடலாதிக்கத்தை உடைக்கத் தளம் தேட வந்ததாக அவரே சொல்லவில்லையா? அதற்காகத்தான் வந்தார். வந்த இடத்தில் நீ கண்ணில் பட்டாய். அவ்வளவுதான். உன்னைத் தொட்டுச் சென்று விடுவார். மஞ்சளழகி, திரும்பவும் வர மாட்டார்' என்று மதி சொல்கிறது. அது மட்டுமல்ல...என்று மஞ்சளழகி தன் உணர்ச்சி வேகத்தைச் சிறிதே தடைசெய்தாள்.

"வேறு எது?" இளையபல்லவன் குரல் வறண்டு கிடந்தது. "உங்கள் மனம் வேறு ஒருத்தியையும் தொட்டிருப்பதாகவும் என் புத்தியில் பட்டிருக்கிறது." என்றாள் மஞ்சளழகி துயரம் தோய்ந்த குரலில். (தொடரும்...)

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 26

## இவர்களாய்ப் பிறப்பேனா?



அவனுடைய தியாகத்திற்கு அப்புறம் எனக்குப் பிடித்தது அவனது தொப்பியும் மீசையும்தான்.

தன்னல மறுப்பும் தியாக உணர்வும் குறைந்து கொண்டு வருகிற நிகழ்காலத்தை நினைக்கும் போதெல்லாம். அவன் முகம் என் கனவுகளின் அடிவாரத்திலிருந்து நிமிர்கிறது.

ஓர் உயர்ந்த லட்சியத்திற்கு முன்னால் உயிர் எவ்வளவு துச்சமானது என்பதை அவனாய் நானிருந்தாலொழிய அறிவது சிரமம்.

பாரதியார்.

என் கண்ணும் காதும் அறிந்த வரை கவிதையே அவனாய் அவனே கவிதையாய் வாழ்ந்த ஒரே கவிஞன் பாரதிதான்.

அவன் கவிதைக்கும் வாழ்க்கைக்கும் முகமூடியும் கிடையாது. முக்காடும் கிடையாது, இடைவெளி என்பது இல்லவே இல்லை.

முக்கால் நூற்றாண்டுக்கு முன்பே பழைமையின் பிடியிலிருந்து தேசத்தை விடுவிக்க வேண்டுமென்பதற்கு முன்னுரையாக ஜதீகத்தின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு வெளியே வந்தவனல்லவா.

வறுமை அவனுயிரை முற்றுகையிட ஒத்திகை பார்த்தபோதும் அவனது கம்பீரத்தின் உயரம் குறையவில்லையே.

சீட்டுக்கவி எழுதும் போது கூடத் தானும் ஓர் அரசன் என்றல்லவா அரசனுக்கு ஆணையிட்டுக் கேட்டான்!

தான். அவனுக்குச் சமானம் என்றுதானே சன்மானம் கேட்டான்.

அந்த ஆண்மை கவிஞனிடம் தவிர, வேறு எவனிடம் இருக்கும்?

இந்தக் கன்றுவாழை, தாய் வாழை யாய்ப் பிறக்கத் தவிக்கிறது.

### கவி வாசகம்

தனிமனிதனையும் தனியொருவனையும் பாடிய சங்கத்தமிழ்க் கவிதை, வாழ்க்கைக் கருவியாக இருந்தது.

சங்கத்தமிழ் சமயத் தமிழ் என்ற நிலைக்கு இடம்பெயர்ந்தபோது வாழ்க்கைக் கருவியாக இருந்த கவிதை, வழிபாட்டுக் கவியானது.

"மனிதனைப் பாடாதீர், இறைவனைப் பாடுமீன்" என்ற புதிய கவிதைக் கொள்ளை.

**"என்னாவது எத்தனை**
**நாளைக்குப் போதும் புலவீர்காள்!**
**மன்னா மனிதரைப் பாடிப்படைக்கும்**
**பெரும் பொருள்**
**மின்னார் மணிமுடி விண்ணவர்**
**தாதையைப் பாடினால்**
**தன்னாக வேகொண்டு சன்மமும்**
**செய்யாமையும் கொள்ளுமே"**

(திவ்வியப் பிரபந்தம் 3212)

என்ற ஓங்காரக் குரலில் ஒலித்தது.

"இன்பமும் பொருளும் அறமென்றாங்கு
அன்போடு புணர்ந்த ஐந்தினையின்'

துறைகளையெல்லாம் பக்தி இலக்கியம் படிமமாற்றம் செய்தது.

டாக்டர் கா.மீனாட்சிசுந்தரம் அவர்கள் தம் எம்.லிட் ஆய்வுரையில் குறிப்பிடுவதுபோல.

**"மனிதர் கொள்ளும் காதல், ஆழ்வார்கள் நாயன்மார்களுடைய காலத்தில் தெய்வீகக் காதலாகி விட்டது. உலகிய போர் உள்ளத்தின் போராகி விட்டது."**

(பாரதி பாநிலை. பக்கம்-106)

உண்மையில் உள்ளத்தின் பேரில்தான் பக்தி இலக்கியம் கனன்றது. கனிந்தது.

இறைவனைப் பாடுதல் என்பது திருக்கோவில்களையும் அவன் திருநாமங்களையும் உச்சரித்து மனத்தை ஒய்வுறுத்துவதன்று.

இறைவனைப் பாடுதல் என்றால் 'இறைமையைப் பாடுதல்' என்பதே பொருள். இறை அனுபவத்தைப் பாடுவது என்பதுதான் பொருள். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

368

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## கோப்பி அருந்துவதால்... பரபரப்பாக வெளிவரும் ஆய்வுகளின் முடிவுகள்



கோப்பி என்ற சுவையான பானத்தை அருந்துவதால் ஏற்படும் நன்மையான விளைவுகள் சம்பந்தமாக பல ஆய்வுகளின் முடிவுகள் வெளிவந்துள்ளன. இது மருத்துவ உலகில் தற்போது ஆர்வமாகப் பேசப்படும் ஒரு விடயமாக இருக்கிறது. கோப்பி அருந்துவதன் அனுகூலமான விளைவுகள் பற்றி நம் முன்னோர்கள் அன்றே அறிந்து வைத்திருந்தனர்.

கோப்பியையும் மல்லியையும் அரைத்து கோப்பித் தூளை வீட்டிலேயே தயாரித்து உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த பருகி வந்துள்ளனர். அத்துடன் ஒருவருக்கு சளி, தடிமன் இருக்கும் போது முட்டைக் கோப்பி அருந்துவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. ஒருவருக்கு குடலிலே அழற்சி அல்லது வயிற்றோட்டம் ஏற்படும் போது அதனை குணப்படுத்த கோப்பி அருந்தும் வழக்கம் அன்று முதலே இருந்து வருகிறது. தற்போதுதான் இந்த கோப்பி அருந்துவதன் அனுகூலமான விளைவுகள் பற்றி ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டு வருகிறது.

கோப்பியானது, எமது பகுதிகளிலும் இலகுவாக வளரக் கூடிய ஒரு பயிராகும். ஆனால் நாம் அதில் கவனம் எடுப்பதில்லை. எதிர்காலத்தில் நாம் அதில் கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற American college of cardiologist இன் விஞ்ஞான மாநாட்டில் கூட கோப்பி அருந்துவதால் ஏற்படும் பல்வேறு அனுகூலமான விளைவுகள் மற்றும் ஆய்வுகளின் முடிவுகள் வெளியிடப்பட்டன. அதன்படி, கோப்பி அருந்துவதால் இருதய நோய்கள் வெகுவாக குறைவடைகின்றன என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக இருதய துடிப்பில் ஏற்படும் மாற்றங்கள் (Arrhythmia) நிகழும் வீதத்தை குறைப்பதுடன் சடுதியாக ஏற்படும் சிறுநீரக கோளாறுகள் (Acute kidney injury) ஏற்படும் வீதமானது, கோப்பி அருந்துபவர்களில் 11 % குறைவாக காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகளில், 14000 பேர் தொடர்ந்து 25 ஆண்டுகளாக ஆய்வு செய்யப்பட்டுள்ளனர். அந்த ஆய்வில், கோப்பி அருந்துபவர்களின் இறப்பு வீதம் குறைவாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும் கோப்பி அருந்துவதால் ஏற்படும் பல நன்மையான விளைவுகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. குறிப்பாக இளம் வயதினரிடையே கோப்பி அருந்துவதால் முடி உதிர்வது குறைவடைவது அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தோல் ஆரோக்கியம் மேம்படுவதும் சில ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. அப்படி என்றால், உண்மையாக இந்த கோப்பியில் என்ன பதார்த்தங்கள் இருக்கின்றன, எதனால் இந்த அனுகூலங்கள் ஏற்படுகின்றன என்பது பற்றி பார்த்தால் இந்த கோப்பியில் 1000 இற்கும் அதிகமான Biologically active பதார்த்தங்கள் இருக்கின்றன. இதில் caffeine இருக்கின்றது. அத்துடன் பல Antioxidants இருக்கின்றன. (chlorogenic acid and caffeic acid). இப்பதார்த்தங்கள் தொழிற்படும் விதம் சிக்கலானது. ஆனால், இவற்றின் விளைவுகளால் பலவகையான புற்றுநோய்கள் ஏற்படும் வீதம் குறைவடைவது ஆய்வுகளின் மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கோப்பி அருந்துவதால், உடலில் அழற்சி ஏற்படுவது குறைவாக உள்ளது. முக்கியமாக, Insulin resistance இனை குறைத்து, Insulin தொழிற்படும் வீதத்தை அதிகரிக்கிறது. இதனால், வகை 2 நீரிழிவு நோய் (Type 2 Diabe tes) ஏற்படும் வீதத்தையும் குறைக்கின்றது.

அத்துடன், கோப்பியானது, பசி ஏற்படும் வீதத்தை குறைப்பதுடன் அனுசேப வீதத்தை அதிகரிப்பதால் நிறை குறைப்பு முயற்சிக்கும் உறுதுணையாக இருக்கிறது. இதற்கு மேலதிகமாக பல நரம்பு சம்பந்தமான நோய்கள் ஏற்படுவதையும் கோப்பி குறைப்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. குறிப்பாக Parkinson's disease எனப்படும் நரம்பு சம்பந்தமான நோய், ஞாபக மறதி காரணமாக வரும் Alzheimer's disease ஏற்படும் வீதம் கோப்பி அருந்துபவர்களில் குறைவாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

கோப்பிக்கு ஈரலை பாதுகாக்கும் தன்மையும் இருக்கிறது. ஈரல் நோய்களால் ஏற்படும் இறப்பு வீதம் கோப்பி அருந்துபவர்களில் குறைவாக இருப்பதாக ஆய்வுகளின் முடிவுகள் உறுதிபடுத்துகின்றன.

கோப்பி அருந்துவதால் பல்வேறு நன்மையான விளைவுகள் இருந்தாலும் கூட சில தீமையான விளைவுகளும் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகவும் நாம் தெரிந்து வைத்திருப்பது அவசியம். குறிப்பாக, கர்ப்ப காலங்களிலும் பாலூட்டும் காலங்களிலும் கோப்பியை அருந்துவது பாதுகாப்பானதல்ல. இந்த நிலைகளில் கோப்பி அருந்துவதை தவிர்ப்பது நல்லது.

இதற்கு மேலதிகமாக, குளுக்கோமா என்ற கண் நோய் உள்ளவர்கள் கோப்பி அருந்துவதால் கண்ணில் அமுக்கம் அதிகரிக்கும் நிலை இருப்பதால் இவர்களும் கோப்பி அருந்துவதை தவிர்ப்பது நல்லது. அத்துடன் கோப்பி அருந்துவதால் ஒரு சிலரில் நித்திரை குறைவு, பதற்றம், இரத்த கொழுப்பு (cholesterol) அதிகரிப்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக பார்த்தால் கோப்பி என்ற சுவையான பானத்தை அருந்துவதால் எமக்கு உற்சாகம், ஊக்கம் கிடைக்கிறது. அத்துடன் மனச்சோர்வு ஏற்படும் வீதம் குறைகிறது. அதற்கு மேலதிகமாக உடல் சம்பந்தமாக பல நல்ல விளைவுகள் ஏற்படுகின்றன. நாம் வாழும் காலம் அதிகரிக்கிறது.

எனவே, கோப்பி அருந்துவதால் ஏற்படும் தீயவிளைவுகளையும் மனதில் நிறுத்தி அளவாக கோப்பி அருந்தி அதன் அனுகூலமான விளைவுகளை நாம் பெற்றுக் கொள்ளலாம் என்பது தான் மருத்துவ உலகின் முடிவாக இருக்கிறது.

Dr.சி. சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 நிமிடத்தில் 5000 ரொக்கட்டுக்கள்

# இஸ்ரேல் மீது ஏவிய ஹமாஸ் ஆயுதக்குழு

## போருக்கு தயார்!– அறிவித்தது இஸ்ரேல்

(இஸ்ரோ)

**இஸ்ரேல் நாட்டின் தென்பகுதியில் இஸ்லாமிய ஆயுதக்குழுவான ஹமாஸ் திடீர் தாக்குதல் நடத்தியது. வெறும் 20 நிமிடத்தில் 5,000 ரொக்கெட்டுகளை ஏவிய தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேலில் பதற்றம் நிலவுகிறது.**

ஜெருசலேம் உட்பட நாட்டின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் அபாய ஒலி எழுப்பப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, பாதுகாப்புத் துறை அதிகாரிகளுடன் அவசர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். போருக்கான தயார் நிலையை இஸ்ரேல் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்த திடீர் தாக்குதலைத் தொடர்ந்து ஹமாஸ் என்ற இஸ்லாமிய ஆயுதக் குழுவைச் சேர்ந்த டசின் கணக்கான ஆயுதக் குழுவினர் தெற்கு இஸ்ரேலுக்குள் நுழைந்து தற்போது தலைமறைவாக உள்ளனர்.

கர்ஸா பகுதியில் உள்ள இலக்குகளை ஹமாஸ் ஆயுதக் குழு தாக்கி வருவதாகவும் அப்பகுதியில் நிலவும் சூழ்



நிலையை மதிப்பிட்டு வருவதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, 20 நிமிடத்தில் 5,000 ரொக்கெட்டுகள் இஸ்ரேலை நோக்கி ஏவப்பட்டன.

இதனால் நாடு முழுவதும் வான் வழித் தாக்குதல் எச்சரிக்கையை அறிவிக்கும் விதமாக அபாய ஒலிகள் எழுப்பப்பட்டன. (நி)

# தனது பொறியில் தானே சிக்கிய சீனா?

(பீஜிங்)

சீனாவின் மஞ்சள் கடல் பகுதியில் வேறு நாட்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் கப்பல்கள் செல்வதை தடுக்கும் நோக்கத்தில் சீனா சங்கிலி பொறிமுறை அமைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பொறியில் சீனாவின் அணுசக்தி நீர் மூழ்கி கப்பலே சிக்கியுள்ளதாக தகவல் வெளியாகி பரபரபரப்புக்குள்ளாகியுள்ளது.

தென் சீனக்கடல் பகுதியில் ஆதிக்கம் செலுத்தியுள்ள சீனா உலக வல்லரசு நாடான அமெரிக்காவுக்கே சவால் விடுக்கும் வகையில் தற்போது செயற்பட்டு வருவதோடு அண்டை நாடுகளோடும் மோதல் போக்கை கடைபிடித்து வருகின்றது.

தென் சீன கடல் விவகாரத்தில் வியட்நாம், இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகளுடன் சீனா மோதல் போக்கை கையாண்டு வருகிறது மேலும் அமெரிக்க போர்க்கப்பல்கள் தென் சீனக் கடலில் ரோந்து பணியில் ஈடுபடுகின்றன.

இவ்வாறான நிலையில் தங்கள் நாட்டின் கடல் பகுதியில் பிற நாடுகளின் கப்பல் செல்லக் கூடாது என்பதற்காக கடலுக்கு அடியில் சங்கிலி பொறிமுறை அமைத்துள்ளது.

இந்த பொறிமுறையை சீனாவுக்கும் கொரியாவுக்கும் இடையேயான மஞ்சள் கடல் பகுதியில் சீனா அமைத்துள்ளதாக கூறப்படுகிறது.

குறித்த பொறிமுறை கடலுக்கு அடியில் பல கிலோமீற்றர் தொலைவுக்கு அமைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த சங்கிலியில் கப்பல்கள் சிக்கினால், அதில் இருந்து மீண்டு வருவது கடினம்.

மேலும் இந்த பொறிமுறை யில் சிக்கிய பின்னர் விடுபடுவதற்கு பல மணிநேரம் எடுப்பதால் கப்பலில் இருப்பவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதோடு கப்பலும் விபத்தில் சிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், தான், கடந்த ஓகஸ்ட் மாதம் சீனாவுக்கு சொந்தமான 093-417 என்ற நீர் மூழ்கி கப்பல் குறித்த பொறிமுறையில் சிக்கியதாக சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் இராணுவத்தினரால் வைக்கப்பட்டிருந்த நங்கூரம் மற்றும் இரும்புச் சங்கிலியில் நீர் மூழ்கி கப்பல் சிக்கியுள்ளதாகவும் கப்பலை மீட்க 6 மணி நேரம் ஆகியதாகவும் கூறப்படுகிறது.

கப்பலில் உள்ள ஊழியர்களுக்கு ஆக்சிஜன் வழங்கும் அமைப்புகள் செயல் இழந்து, 21 அதிகாரிகள் உட்பட 55 பேர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் சீனா இந்த தகவலை திட்டவட்டமாக மறுத்து உள்ளது.

எனவே இந்த தகவலில் உண்மைத் தன்மை கேள்விக் குறியாகியுள்ளதால் குறித்த விபத்து இடம் பெற்றிருந்தால் அணு கசிவு போன்றவற்றால் நீர் மாசு ஏற்படலாம் என்று அத்துறை சார்ந்த நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (நி)


## மணமகள் தேவை

நல்ல குடும்பப் பின்னணியிலுள்ள 1990இல் பிறந்த 5'8" உயரமான, MBA, BSc படித்த BioMedical Engineer ஆக கொழும்பில் வசித்து தொழில் புரியும் யாழ். இந்து *மணமகனுக்கு 25-29 வயதிற்குட்பட்ட தகுதியான மணமகள் தேவை.

தொலைபேசி
Whats App 077 308 1905 (சி-2138)


# பிரான்ஸை அச்சுறுத்தும் மூட்டைப்பூச்சிகள்

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரத்திலும் அந்நாட்டின் பிற நகராங்களிலும் மூட்டைப்பூச்சிகள் அதிகளவில் படையெடுத்துள்ளன.

இது, பூச்சிகள் குறித்த பரவலான வெறுப்பையும் பயத்தையும் உருவாக்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், அடுத்த ஆண்டு ஜுலை முதல் ஓகஸ்ட் வரை பாரிஸில் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டிகளின்போது உடல்நலம் மற்றும் பாதுகாப்புக் குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளதாகவும் பிரெஞ்சு ஊடகங்களும் சர்வதேச ஊடகங்களும் தெரிவிக்கின்றன.

ஆனால், ஒவ்வொரு ஆண்டும் கோடை காலத்தின் பிற்பகுதியில், மூட்டைப்பூச்சிகள் பெருமளவில் அதிகரிப்பது வழமை என மார்செய் நகரத்தின் பிரதான மருத்துவமனையின் பூச்சியியல் நிபுணரான ழான்-மிஷெல் பெராஞ்ஜே தெரிவித்தார்.

ஜுலை, ஓகஸ்ட் மாதங்களில் பொதுவாக மக்கள் வெளிநாடுகளுக்கு பயணம் செய்கின்றனர். அவர்களது பைகள் மற்றும் பெட்டிகளில் மூட்டைப்பூச்சிகள் ஒட்டிக்கொண்டு பிரான்ஸ் நாட்டுக்குள் வருகின்றன.

இப்படி வரும் பூச்சிகளின் எண்ணிக்கை முந்தைய ஆண்டில் இருந்ததைவிட தற்போது அதிகமாக உள்ளது.

இந்த விடயம் பிரான்ஸ் அரசுக்கு மிகப் பெரும் தலைவலியாகவும் மாறியிருக்கிறது என அவர் தெரிவித்தார். (நி)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:
076 097 3127
021 221 7603
Viber/ Whatsapp: 076 636 3378
E.mail:
Valampurii@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல தளங்களில் இயங்கிய படைப்பாளி

## -வட்டுக்கோட்டை மு.நல்லதம்பி

நல்லதம்பிப் புலவர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தைச் சார்ந்தவர். (1896-1951) புலமைப் பாரம்பரியம் மிக்க வட்டுக்கோட்டையில் பிறந்தார். இவரது தந்தையாரான முருகுப்பிள்ளை, திண்ணைப்பள்ளிக் கூட ஆசிரியர். நல்லதம்பிப்புலவர் தனது ஆரம்பக் கல்வியை வட்டுக்கோட்டையிலும் உயர்கல்வியைத் தெல்லிப்பளையிலும் கற்றுத் தேர்ந்தவர்.

பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் இலங்கையின் பல பிரதேசங்களிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். மரபுவழிக் கல்வியை ஆர்வத்தோடு கற்றுவந்த புலவர் தென்கோவை ச.கந்தையாப்பிள்ளையிடம் பாடங் கேட்டார். தென்னிந்திய அறிஞர்களோடு நெருங்கிய தொடர்பைப் பேணிய இவர், எழுத்தாற்றலும் நாவன்மையும் மிக்கவர். நல்லதம்பிப் புலவரது திறமையைச் சிறப்பிக்கும் வகையில் தென்னிந்தியாவில் உள்ள திருநெல்வேலி தமிழ்ச் சங்கத்தார் முதுதமிழ்ப்புலவர் என்ற பட்டத்தினைப் புலவருக்கு வழங்கி கௌரவித்தனர்.

மரபுவழிக்கல்வி வாய்க்கப்பெற்ற நல்லதம்பிப் புலவர் ஆசிரியராக மட்டுமன்றி சிறிது காலம் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பகுதிநேர விரிவுரையாளராகவும் பணியாற்றினார். தென்னிந்திய ஆதீனங்களோடும் புலவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. புலவர், பேச்சாளர், நாடகநடிகர் என பல தளங்களில் இயங்கியுள்ள நல்லதம்பிப்புலவர் பெரியோர்களோடு நல்லுறவு பூண்டிருந்தார். "மனக்கினிய பெருங்குணத்து நல்லதம்பிப்பிள்ளை" என சுவாமி விபுலாநந்தரால் சிறப்பிக்கப்பட்டார்.

முதுதமிழ்ப் புலவருக்கு சிறப்பைத் தந்த விடயங்களில் தேசிய கீதத்தை மொழிபெயர்த்து தமிழில் பாடியமை மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் தேர்ச்சிமிக்க புலவர் 28 ஆண்டுகள் கொழும்பு சகிறாக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

சிங்களவர், முஸ்லிம்கள் என பல்லின மத, மொழி, பண்பாட்டைச் சார்ந்தவர்களோடு பழகும் வாய்ப்பு கிடைத்தமை புலவரது கண்ணோட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கைத்தீவின் பன்முக அம்சங்களைத் தனது படைப்புகளில் வெளிக்கொணர்ந்தமைக்கு அவருக்குக் கிடைத்த அனுபவங்களே வாய்ப்பாக அமைந்த தெனலாம்.

மணித்தாய் நாடும் மரதன் ஓட்டமும், இசைக்கல்லூரி அமைப்பு விழாப்பாடல்கள்,ஈழவாசகம், பாலபோதம் ஆறாம் ஏழாம் புத்தகங்கள். மொழிப் பயிற்சி,கண்ணிநுண்சிறு தாம்பு, இயற்கை விளக்க வாசகம், நவமணிவாசகம், வெண்பாவிடுதூது, கட்டுரைகள் உள்ளடங்கலாக பல்வேறு ஆக்கங்களை புலவர் எழுதியுள்ளார். இவை பெரிதும் இளையோரை மையப்படுத்தியனவாய் உள்ளன. புலவரது பிரிவிற்குப் பின் 1958 இல் வட்டுக்கோட்டை இளைஞர் மன்ற வெளியீடாக இளைஞர் விருந்து என்ற நூல் வெளிவந்தது.

1958இல் வெளிவந்த இளைஞர் விருந்து நூலிற்கு பண்டிதர் க. மயில்வாகனனார் விரிவான முகவுரையையும், கலாநிதி. க.கணபதிப்பிள்ளை, பண்டிதர். சோ.இளமுருகனார் ஆகியோர் சிறப்புப்பாயிரத்தையும் வழங்கியுள்ளனர். நூல் குறித்த விரிவான அறிமுகத்தை பண்டிதர் பொ.கிருஸ்ணபிள்ளை எழுதியுள்ளார். நூலில் இடம் பெற்றுள்ள 89 பாடல்



களும் அவற்றின் பொருள் நிலை சார்ந்து தெய்வம், இயற்கை, நாடும் மொழியும், விழாக்கள், பெரியோர். நற்பழக்க வழக்கங்கள், தொழிலும் கல்வியும், பொது, கதைப்பகுதி, குழந்தை இலக்கியம் ஆகிய பத்து பிரிவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. நூலின் நிறைவில் புலவரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சுருக்கமான வகையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நல்லதம்பிப் புலவர் தொடர்பாக இதுவரை குறித்த சில கட்டுரைகளே வெளிவந்துள்ள போதும் அவரது படைப்புகளை ஒட்டு மொத்தமாக நோக்கிய விரிவான ஆய்வு நிகழவில்லை. அவரது ஆக்கங்கள் பல இன்னும் நூலுருப்பெறாது உள்ளன. சகிறாக் கல்லூரிக் கீதங்களும் இசைக் கலைக் கல்லூரி அமைப்பு விழா இசைப் பாடல்களும் வேறு சில கவிதைகளும் என்ற தலைப்பில் நல்லதம்பிப் புலவரின் ஆக்கங்களை 2016 இல் பண்டிதர் ம.கடம்பேசுவரன் அவர்கள் வெளியிட்டிருந்தார். அதில் உள்ளடங்கியுள்ள சகிறாக் கல்லூரிக் கீதங்களும் இசைக்கலைக்கல்லூரி அமைப்பு விழா இசைப்பாடல்களும் 1937 கல்லச்சாக வெளிவந்தனவாகும். ஆனால் வேறு சில பாடல்கள் என்ற பகுதி இதுவரை வெளிவராத பாடல்களே உள்ளடக்கியது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப கால ஈழத்து இலக்கியப் போக்கில் சமயச் சார்பானது செல்லாக்குப் பெற்றிருந்தது. ஆங்கிலக் கல்வியின் பயனாக ஏலவே வழக்கிலிருந்த மரபு இலக்கிய வடிவங்களோடு நவீன இலக்கிய வடிவங்களும் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. அக்காலப் பகுதியில் மரபு வழிக் கல்வியைக் கற்றுத் தேர்ந்த நல்லதம்பிப் புலவர் இலக்கியங்கள் ஊடாகச் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற நோக்கில் சமூக உணர்வோடு தனது படைப்புகளை எழுதியுள்ளார்.

புலவரது வெளிப்பாடானது அன்று வழக்கிலிருந்த மரபு சார்ந்த இலக்கியப் போக்கில் தனித் தன்மையானது எனலாம்.சிறுவர்கள் மனதில் நல்ல சிந்தனைகளை விதைப்பதன் ஊடாக ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை புலவரிடத்து இருந்துள்ளது. சிறுவர்களுக்காக அவர் எழுதிய கவிதைகள், கதைப்பாடல்கள் முதலானவை முக்கியமானவை. ஒழுக்கம், பண்பாடு, மனிதநேயம், சூழலை நேசித்தல் என நல்லொழுக்கங்களை உபதேசிக்கும் ஓர் ஆசானின் குரலாக புலவரது கவிதைகள் அமைந்துள்ளன. சிறுவர்களுக்குரிய கவிதைகள் அவர்களுக்குரிய மொழியில் இசை தழுவியனவாக உள்ளன.

சந்த நயம்மிக்கனவாகவும் எளிமையானவையாகவும் அமைந்திருத்தல், கதைகளைப் பாடல்களின் ஊடாகக் கூறுதல், உரையாடல் மூலம் கொண்டுசெல்லல், நேரடியாக விபரித்தல் என பல்வேறு தனித்துவமான அம்சங்களை இவரது சிறுவர் பாடல்களில் காணமுடிகிறது.

நல்ல தம்பிப்புலவர் நாடகத்திலும் ஆர்வமுடையவர். புலவரது படைப்புகளிலும் நாடக அம்சங்கள் வெளிப்பட்டுள்ளன. ஈழத்தில் சிறுவர் இலக்கியம் சார்ந்து செயற்பட்ட மரபுவழிவந்த புலமையாளர்களில் நல்லதம்பிப் புலவரின் பங்களிப்பு முக்கியமானது,

மனிதர் தமக்குள் வேற்றுமை கொள்ளாது கூடி வாழவேண்டும் என்பதே புலவரது வேட்கையாகும். பிறப்பாலும் தொழிலாலும் ஏற்றத் தாழ்வுகளைக் கற்பிக்கும் சமூக மனநிலை கூர்மையாக இருந்த அக்காலத்தில் அவற்றுக்கு எதிராகப் புலவர் முன்வைத்துள்ள கருத்துகள் முக்கியமானவை. சமூகத்தில் புரையோடிப் போயுள்ள சாதியச்சிக்கலுக்கு தொழில் சார்ந்த காரணிகளே அடித்தளமாக உள்ளமையை உணர்ந்து கொண்ட புலவர் ஒவ்வொரு தொழிலும் மேலானதே என்பதை அழுத்தியுரைக்கிறார்.

"மக்கள் எல்லாரும் ஒரு குலங்காணொங்கள்
வாழ்விலுறு துணைச்செல்வர்கள் காண் சொல்லும்
எக்குலத்தாகும் இழித்தவரல்லர்
இதையுணர்ந்தாற் பகையில்லையையா" என்று பாடுகிறார்.

புலவரது தனிச்சிறப்பில் முக்கியமானது உணர்ச்சி வசப்படாது பக்குவமான வகையில் தனது உணர்வை வெளிப்படுத்தலாகும். பிரச்சினைகளை இனங்கண்டு சுட்டிக்காட்டுவதோடு அதிலிருந்து மீள்வதற்கான வழிகளையும் முன்வைத்து உரையாடுக்கின்றமை இவரது கவிதைகளின் முக்கிய அம்சமாகும் கல்வி முறைமை, தொழில், குடும்பவாழ்வு, பயணவழிகள் என மக்கள் அன்றாட வாழ்வில் எங்கெல்லாம் நெருக்கடிகளை எதிர்கொண்டார்களோ, விழிப்புணர்வற்றுச் செயற்பட்டார்களோ அவைகுறித்தெல்லாம் புலவர் அக்கறைகொண்டிருந்தார்.

இலங்கைத் தீவின் சிறப்பையும் இனமத வேறுபாடுகளைக் கடந்து வேற்றுமையில் ஒற்றுமை காணும் நோக்கினையும் நல்லதம்பிப் புலவரது பாடல்களில் இனங்காண முடிகிறது. சுதந்திரத்திற்கு முன்பும் சுதந்திரமடைந்த பின்பும் வாழ்ந்த புலவர் தமிழ் உணர்வு மிக்கவராகி விளங்கினர்.

தமிழர்கள் தமது சமூக பொருளாதார பண்பாட்டு விடயங்களில் மேம்பட வேண்டும். என்பதை வலியுறுத்தியுள்ளதோடு கைக்கொள்ள வேண்டியவற்றையும் கைவிட வேண்டியவற்றையும் தெளிவுற முன்வைத்துள்ளார்.

ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற குறுகிய காலத்தில் தீவில் பெரியளவான பஞ்சம் ஏற்பட்டமை வரலாறு இயற்கை வளமும் உயிர் வாழ்வதற்கான நல்ல சூழலும் வாய்க்கப் பெற்றிருந்தாலும் தூரநோக்கும் சுயசார்பும் அற்ற நிலையில் தளர்ச்சியுற்று அன்றாட உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு பஞ்சம் தலைவிரித்தாடியது. அக்காலத்து நெருக்கடிகளையும் அவற்றில் இருந்து மீள்வதற்கான வழிகளையும் நல்லதம்பிப் புலவர் தனது கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

"செழுமை கொண்ட நிலமமைந்த ஈழநாடே- பிறரைத்
தேடி நீ இரப்பதென்ன ஈழநாடே
உழவிலே சிறந்து நின்ற ஈழநாடே- இந்நாள்
ஊணிலாது வாடலென்ன ஈழநாடே" என்று பாடும் புலவர்,

"கைத்தொழிற் சிறப்பிலே களிக்கிறார் பிறத்தியார்
கறுமமோவி தெங்கள் நாடு கவலை கொண்டு வாடுது
சொத்திலாத ஏழைமக்கள் துடிதுடிப்பர் பசியினால்
சோறிலாது கூழிலாது சோர்வு கொண்ட பிள்ளைகள்
செத்தலாகிய வெற்றெலும்பு தெரிய மூளை வறியராய்ச்
சிந்தை நொந்து கந்தையோடு திரிதலென்று தீர்ந்திடும்
ஏத்தினாலும் ஒத்துவாழும் இன்பமற்றமாந்தீர்
ஈது நீங்கிடாது நாமிருத்தலீனமீனமே"

என்று தொடரும்கவிதை அக்காலச் சமூக நிலையையும் மாற்றத்தின் அவசியத்தையும் புரிந்து கொள்வதற்கு வகை மாதிரியாக உள்ளது.

தெளிவுதர மொழிந்திடும் புலவரது கவிதைகள் எளிமையும் சந்த நயமும் ஆழமும் மிக்கனவாய் கற்போரை ஈர்க்கும் தன்மையனவாக உள்ளன. சமயப் பற்றும், தெளிந்த நோக்கும். ஆரோக்கியமான சமூகத்தைக் காண விளையும் வேணவாவும் இவரது ஆக்கங்களில் முதன்மை பெற்றுள்ளனர். இங்கே எடுத்துக் காட்டப்பட்டவை நல்லதம்பிப் புலவர் சிலகுறிப்புகளே. புலவரின் ஆக்கங்களை முழுமையாக வெளிக்கொணர்ந்து அவரது பங்களிப்பினை வெளிப்படுத்துவதே சமூக உணர்வோடு பணியாற்றிய இலக்கிய கர்த்தாவுக்கு செய்யும் பிரதான கடமையாகும்.

**ந.குகபரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைப் பண்பு என்பது தற்சார்பற்று இருத்தல் நலம். தன்னலம் கருதிய தலைமை இன்றைய நிலைமையில் நிர்வாகத்தை தலைகீழாக மாற்றும் வல்லமை கொண்டது. ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொழும்பில் நடந்த அனர்த்தம் நமக்குப் பாடமாக அமையட்டும்

கொழும்பில் பயணிகள் பேருந்து வண்டி நிறுத்தப்பட்ட வேளை அருகிலிருந்த பாரிய மரமொன்று சரிந்து பஸ் வண்டி மீது விழுந்ததில் ஐந்து பேர் பலியாகிய சம்பவம் மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

மரம் சரிந்து விழுவது ஒரு கணப் பொழுது தாமதித்திருக்குமாயின், பஸ் வண்டி அந்த இடத்தைவிட்டு நகர்ந்திருக்கும்.

என்ன செய்வது காகம் இருக்கப் பனம் பழம் விழுந்த கதையாக பஸ் வண்டியும் வந்து நிற்க, மரமும் சரிந்து பஸ் வண்டி மீது விழுந்து ஐவரின் உயிரைக் காவு கொண்டது.

இந்தத் துயரச் சம்பவம் கொழும்பில் நடந்தது என்று நினைப்பது அபத்தமானது.

ஆம், பஸ் வண்டி மீது சரிந்து விழுந்த மரம் ஏலவே பாறிப் போயிருந்ததென்பது பலரதும் அவதானிப்பு.

எனினும் பாறி நின்ற மரம் சரிந்து விழக்கூடிய ஆபத்து உண்டு எனக் கருதப்பட்டிருந்தால், அந்த மரத்தைத் தறித்து அங்கிருந்து அகற்றியிருக்க முடியும்.

ஆனால் சம்பந்தப்பட்ட அரச அமைப்புகள் அது தொடர்பில் கருசனையற்றதாக இருந்தமையால், ஐந்து பேர் உயிரிழந்து 17 பேர் படுகாயமடைகின்ற துயரச் சம்பவம் நடந்து முடிந்தது.

இங்குதான் ஓர் விடயத்தை நாம் கவனிக்க வேண்டும். அதாவது கொழும்பில் நடந்த மேற்படி சம்பவமானது, கொழும்பில் மட்டுமே நடக்கும் என்று யாரும் நினைத்து விடலாகாது. அது எங்கும் எப்போதும் நடக்கலாம்.

ஆகையால் அந்த அனர்த்தம் நடைபெறாமல் இருக்க வேண்டுமாயின், வீதியோரங்கள் மற்றும் வீடுகள், பாடசாலைகள், அலுவலகங்கள், பொது இடங்களில் இருக்கக்கூடிய மரங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

ஆம், இது மழை காலம். தவிர, பலமான காற்று வீசுகின்ற சூழமைவும் காணப்படுகின்றது.

எனவே வீதியோரங்கள் மற்றும் கட்டடங்களுக்கு அண்மையாக இருக்கக்கூடிய மரங்கள் முறிந்து விழக்கூடிய அபாயம் உண்டா? அல்லது அவை பாறி விழுந்து சேதம் ஏற்படுத்தக்கூடிய கட்டத்தில் நிற்கின்றனவா? என்பன குறித்து கவனம் செலுத்தப்படுவது அவசியமானது.

பொதுவில் எங்கள் பிரதேசங்களிலும் பாரிய மரங்கள் வீதியோரங்களிலும் பாடசாலைக் கட்டடங்களுக்கு அண்மையாகவும் வீடுகளுக்கு நெருக்கமாகவும் வளர்ந்து நிற்கின்றன.

இவ்வாறான மரங்கள் எந்தநேரத்திலும் அனர்த்தத்தை ஏற்படுத்தலாம். எனவே அந்த மரங்களைத் தறிப்பதற்கு அல்லது கிளைகளை வெட்டி மரத்தினது பாரத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேபோல பல இடங்களில் வீடுகளுக்கு நெருக்கமாக பனை மற்றும் தென்னை மரங்கள் ஓங்கி வளர்ந்து நிற்கின்றன. அவை எந்த நேரம் வீடுகளுக்கு மேல் விழும் என்பது தெரியாமல் உள்ளது.

அதேநேரம் அவற்றைத் தறிப்பது தொடர்பில் அனுமதிகள் பெறவேண்டியிருப்பதால் அதுபற்றி சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்கள் அக்கறையற்றவர்களாக இருக்கின்றனர்.

ஆகவே அனர்த்தத்தை ஏற்படுத்தக்கூடிய மரங்கள் எங்கிருந்தாலும் அவற்றைத் தறித்தோ அன்றி அவற்றின் கிளைகளைத் தறித்தோ அனர்த்தம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதனையே கொழும்பில் நடந்த அனர்த்தம் நமக்குக் கற்றுத் தருகிறது.

# பெரமுனவுடன் ஒருபோதும் இணையோம் சு.க தலைமையிலேயே புதிய கூட்டணி

## மைத்திரி பால திட்டவட்டம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணையும் எந்த தயார் நிலையிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இல்லை என அதன் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மீண்டும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தேர்தலை இலக்கு வைத்து தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவது மற்றும் மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது தொடர்பாக கலந்துரையாடி வருகின்றோம்.

அடுத்த நடக்கும் எந்த தேர்தலாக இருந்தாலும் சுதந்திரக்கட்சி, பொதுஜன பெரமுனவுடனான கூட்டணியில் எந்த வகையிலும் இணையாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் கூட்டணியை உருவாக்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாகவும் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். (ம-7)

## அஞ்சல் தினத்தை முன்னிட்டு கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை அஞ்சலகம் நடத்தும் வடமராட்சிக்குட்பட்ட அரச நிறுவனங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியானது இன்று காலை 9.00 மணி முதல் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை அஞ்சல் அதிபர் அ.அருளானந்தசோதி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அஞ்சல் அத்தியட்சகர் கு.செந்தில்குமார் கலந்து கொள்ளவுள்ளதோடு சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் மா.முரளி கலந்துகொள்ளவுள்ளார். (ம-7)

## போதைப்பொருள் வழக்கில் பொலிஸாரால் தேடப்பட்டவர் தமிழகத்தில் கைது

மன்னாரில் ஐஸ் போதைப்பொருள் விற்பனை செய்த வழக்கில் பொலிஸாரால் தேடப்படும் நோயாளர்காவு வண்டி சாரதி பாம்பன் குந்துகாலில் வைத்து நேற்று சனிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னார் அரசு மருத்துவமனை நோயாளர் காவு வண்டிசாரதி ஒருவர் நோயாளர்காவு வண்டியில் ஐஸ் போதைப் பொருள் கடத்தி விற்பனை செய்த வழக்கில் கடந்த ஓராம் திகதி மன்னார் முருங்கன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் போது பொலிஸாரின் கட்டை விரலை கடித்துவிட்டு பொலிஸிடம் இருந்து தப்பி தலைமறைவானார்.

இந் நிலையில் அவர் சட்டவிரோதமாக படகு மூலம் தப்பி இந்திய பாம்பன் குந்துகால் சென்ற போது மண்டபம் மரைன் பொலிஸார் கைது செய்து மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடைபெற்று வருகிறது என தமிழக செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (ம-7,60)

## மின்கம்பி அறுந்ததில் மின்சாரம் தாக்கி பெண்ணொருவர் படுகாயம்

நேற்றையதினம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கரத்தை பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள மின்சார கம்பி அறுந்து விழுந்து, மின்சாரம் தாக்கியதில் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பகுதியில் வீதி அகலிப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் வீதியோரத்தில் நின்ற பனைமரம் ஒன்று வெட்டப்பட்டது. இவ்வாறு வெட்டப்பட்ட பனைமரமானது மின்சார கம்பி மீது விழுந்தது.

பனை விழுந்ததால் மின்சார கம்பி அறுந்து வீதியில் நின்ற பெண்ணொருவரின் மோட்டார் சைக்கிள் மீது முட்டியது. இந்நிலையில் மோட்டார் சைக்கிளில் இருந்த பெண் தூக்கி வீசப்பட்டார். இந்நிலையில் குறித்த பெண் அவசர நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த சம்பவத்தில் ஐந்து மின் கம்பங்கள் முறிந்து சேதமாகின. இதனால் அப்பகுதிக்கு நேற்று பிற்பகல் வேளையில் இருந்து மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

மின்சார இணைப்பினை சீர் செய்யும் நடவடிக்கையில் இலங்கை மின்சார சபையினர் ஈடுபட்டனர். (ம-7,104)

# எல்லே விபத்து; ஒருவர் மரணம்

(எல்லே)

எல்லே - வெல்லவாய பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று காலை இராவண எல்ல பகுதியில் முச்சக்கர வண்டி ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த 70 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளதுடன் முச்சக்கர வண்டியின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும் இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்லே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# ஓட்டோ விபத்தில் பெண்ணொருவர் பலி

புத்தளம் மனத்தீவு பகுதியில் இடம்பெற்ற முச்சக்கர வண்டி விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் இந்த விபத்து நேற்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளத்திலிருந்து 6ம் கட்டை நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி மாடு ஒன்று குறுக்கால் பாய்ந்தமையினால் கட்டுப்படுத்த முடியாமல் மதிலில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது முச்சக்கர வண்டியில் பயணித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் முச்சக்கர வண்டியின் சாரதி மற்றும் இரண்டு சிறுவர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த பெண் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு கோரி கொழும்பில் பாரிய போராட்டம்

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் அழைப்பு

(கொழும்பு)
அதிபர், ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளை கோரி இம்மாதம் ஒக்டோபர் 24ஆம் திகதி கொழும்பில் உள்ள மத்திய கல்வி அமைச்சுக்கு முன்னால் இடம்பெறும் பாரிய போராட்டத்தில் அனைத்து ஆசிரியர் மற்றும் அதிபர்களை கலந்து கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர் ஜெயராஜசிங்கம் போல்வின் அழைப்பு விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள நிலுவை தீர்க்கப்படாமல் உள்ளதால் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் ஆசிரியர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

சம்பள நிலுவை தொடர்பில் அரசாங்கத்துடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தை நடத்திய போதும் இதுவரை தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவில்லை. அதிபர், ஆசிரியர்களின் ஏனைய நிலுவைகள் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளமையால் அவற்றை தீர்க்கும் முகமாக அரசாங்கத்திற்கு அழுத்தம் வழங்குவதற்காக போராட்டத்தை ஒழுங்கு செய்துள்ளோம்.

ஆகவே அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டிற்கு நிரந்தர தீர்வை காணும் முகமாக ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி அனைத்து அதிபர், ஆசிரியர்களும் கொழும்பில் இடம்பெறும் உரிமைப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

குறித்த ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட கல்வி வலயங்களுக்கான செயலாளர்கள் கலந்து கொண்டனர். (நி-33)

# விறகுக் கடத்தலில் ஈடுபட்ட மூவர் பிணையில் விடுவிப்பு

(வவுனியா)
வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவில் விறகு கடத்தலில் ஈடுபட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஒலுமடு கிராமத்தில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு விறகிளை பாரவூர்தியில் ஏற்றிய வேளை குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வனவள வட்டார அதிகாரிகளால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய சம்பவ இடத்திற்குச் சென்று பாரவூர்தியினையும் உழவு இயந்திரத்தையும் கைப்பற்றி வளவள பணிமனைக்கு கொண்டு சென்றனர்.

குறித்த மூன்று நபர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டதையடுத்து எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கழமை வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (5-6)

## சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)
15 ஆம் வட்டாரம், குயின்ஸ் கோபுரம் கடற்படை பாதுகாப்பு அரண், நெடுந்தீவு எனும் முகவரியில் காணப்பட்ட சடலம் இதுவரையிலும் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த நபரின் சடலத்தை அடையாளம் காட்டி பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் சி.எஸ்.யமுனாநந்தா கேட்டுக் கொண்டுள்ளார். (நி)



இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு நாள் நிகழ்வு இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ். நகரிலுள்ள விருந்தினர் விடுதியொன்றில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. (படம்: சிவசாந்தன்)

## அஞ்சல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)
யாழ்.பொதுசன நூலகம் நடத்தும் அஞ்சல் கண்காட்சி எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் நூலக கேட்போர்கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி மதுமதி வசந்தகுமார், பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கெ.செந்தில்குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வானது இரு தினங்கள் (12,13 ஆம் திகதிகள்) நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மன்னாரில்

## மீனவர் வலையில் சிக்கிய அபூர்வ பாம்புமீன்



(மன்னார்)
மன்னார் மீனவர் ஒருவரின் வலையில் மிகவும் அபூர்வமும் ஆபத்தும் நிறைந்த விலாங்கு மீன் என அழைக்கப்படும் பாம்புமீன் ஒன்று சிக்கியுள்ளது.

நேற்று சனிக்கிழமை மீன்பிடியில் ஈடுபட்ட நிலையிலேயே குறித்த மீனவரின் மீன்பிடி வலையில் அது சிக்கியுள்ளது.

பாம்பின் தோற்றம் கொண்ட குறித்த மீன் 10 அடிக்கும் அதிகமான நீளமுடையது.

பெரும்பாலும் இவ்வகை மீன்கள் மீனவர்களின் வலைகளில் சிக்குவது குறைவு. அவ்வாறு சிக்குகின்ற மீன்களும் அளவில் சிறிதாகவே காணப்படும். ஆனாலும் குறித்த மீன் 10 அடிக்கும் அதிகமான நீளத்தை கொண்டதாக காணப்படுகின்றது.

இவ்வகை மீன்கள் இடுப்பு பிடிப்பு உட்பட பல்வேறு நோய்களுக்கான மருந்தாக அமைவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (நி-285)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 450 | 450 |
| தக்காளி | 200 | 200 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 140 | 150 | 150 |
| கோவா | 200 | 150 | 160 | 200 |
| கரட் | 250 | 250 | 280 | 300 |
| பூசணி | 60 | 80 | 60 | 80 |
| புடோல் | 80 | 80 | 120 | 160 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 250 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 240 | 300 |
| பாகற்காய் | 450 | 450 | 450 | 500 |
| வெண்டக்காய் | 120 | 150 | 100 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 150 | 200 |
| பயற்றங்காய் | 500 | 300 | 200 | 400 |
| லீக்ஸ் | 250 | 140 | 150 | 200 |
| பீற்றூட் | 120 | 120 | 150 | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 280 | 400 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 100 | 200 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 120 | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 50 | 70 | 120 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1200 | 1800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 450 | 450 | 550 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 400 | 480 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 100 | 120 | 150 |

# 'ஐ' வடிவிலான யானைவேலி முல்லைத்தீவில் அறிமுகம்

()
இலங்கையில் முதல்முதலாக 'ஐ' வடிவிலான யானை பாதுகாப்பு வேலி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் பகுதியில் பாடசாலை ஒன்றிற்கு அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரான கலாநிதி விஜயமோகன் எண்ணத்தில் வடிவமைக்கப்பட்ட யானை பாதுகாப்பு வேலி (தொங்குவேலி) இலங்கையில் முதல்முறையாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் அ.த.க.பாடசாலையினை யானையில் இருந்து பாதுகாப்பதற்காக அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. வவுனியா பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் 10 இலட்சம் ரூபா செலவில் இந்த யானை பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் காமினி செனநாயக்கா மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் மங்களேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்தன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளதுடன் பாடசாலை வளாகத்தினை சூழ அமைக்கப்பட்ட யானைவேலியினை வைபவரீதியாக திறந்து வைத்துள்ளார்கள். (நி-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொமாண்டோ...

களுக்கும் சந்தேகநபருக்கும் இடையிலான பரஸ்பர துப்பாக்கிச் சூட்டில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப் படை ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி தலங்கமவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் குறித்த முன்னாள் கொமாண்டோ சிப்பாய் தேடப்பட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## ஜனாதிபதி ரணில்...

பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்க ஜனாதிபதி யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

ஜனாதிபதியின் வருகையின்போது முல்லை நீதிபதிக்கு நீதி கோரி தமிழ்த் தரப்புகளால் போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம். (ம-7)

## விபரீத முடிவெடு...

பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மதியம் உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக் கேணியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே இவ்வாறு சிகிச்சை பலனின்றி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## வருமானத்தை...

மற்றும் சுங்கத் திணைக்களத்தை வினைத்திறனுள்ளதாக்கும் வகையில், இந்த நிறுவனங்களுக்கு 2024 ஆம் ஆண்டு முதல் இலக்குகளை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

அதன்படி அந்த நிறுவனங்கள் ஈட்ட வேண்டிய வருமானம் உள்ளிட்ட இலக்குகள் வழங்கப்பட உள்ளன.

அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்கு மேற்படி நிறுவனங்கள் முறையாக செயற்படவில்லை எனவும் சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் அரசாங்கத்தின் வருமானத்தை ஈட்டுவதில் இது தொடர்பான நிறுவனங்கள் பலவீனம் காட்டி வருவது அரசாங்கத்தினால் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் உள்ளூர் வருவாய் திணைக்களம் மிகவும் நலிவடைந்த நிறுவனமாக காணப்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய, எதிர்வரும் 2024ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் வழங்கிய இலக்குகளை நோக்கி உரிய நிறுவனங்கள் செயற்பட வேண்டும் என அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ம-7)

## லண்டன் பயண...

பிரான்ஸில் இருந்து சட்டவிரோதமான முறையில் லண்டன் நோக்கி பயணித்தபோது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் கடந்த 1ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் வேறு சில நபர்களுடன் லண்டன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோது படகு புயலில் சிக்கி கடலில் கவிழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

படகில் இருந்த ஏனைய நபர்கள் குறித்த இளைஞரை மீட்ட போதும் அவர் உயிரிழந்துள்ளார். (ம-7)

## முல்லை நீதிபதி...

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி நாட்டைவிட்டு வெளியேறியுள்ள சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணையை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தனக்கு அச்சுறுத்தல் இருந்திருந்தால் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருந்த நீதிபதி அது குறித்து முறைப்பாடு செய்திருக்க வேண்டும்.

அவர் அவ்வாறு எந்தவொரு முறைப்பாட்டையும் முன்வைக்கவில்லை. நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கும் தெரியப்படுத்தவில்லை.

எனவே, இங்கு பாரிய சூழ்ச்சி இருப்பது தெளிவாகின்றது. அவர் வெளிநாடு செல்வதற்கு முன்னர் மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகள் இருவரை சந்தித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

எனவே, அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறினாரா? அல்லது தான் செய்த குற்றங்களில் இருந்து விடுபடுவதற்காக நாட்டைவிட்டு ஓடினாரா? என்பது குறித்தும் ஆராய வேண்டும்.

இங்கு சூழ்ச்சி உள்ளதா?, இதன் பின்னணியில் எதிரணி தொடர்புபட்டுள்ளதா?, நாட்டை அபகீர்த்திக்கு உட்படுத்தும் முயற்சியா? இது என்ற சந்தேகம் எமக்கு உள்ளது. உண்மை கண்டறியப்பட வேண்டும்.

1988-1989 காலப்பகுதியிலும் நீதிபதி ஒருவர் நாட்டைவிட்டு வெளியேறினார். எனவே, இது முதல் சந்தர்ப்பம் அல்ல. அன்று நீதிபதிகள் சாதாரண காரணத்தை வெளியிட்டனர். இவர் வெளியிடவில்லை என்றார். (ம-7)

## அரசியல் தீர்வை...

அவர் மேலும் கூறியதாவது,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜேர்மன் ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணல் தொடர்பில் முதலில் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு இனத்தின் வாக்குகளை மட்டும் இலக்கு வைத்து செயற்படும் நபர் அல்லர்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி இருக்கின்றார்.

இது தொடர்பான அவரின் நிலைப்பாடு மாறவில்லை. எனவே, ஜனாதிபதியின் நேர்காணலை அடிப்படையாகக் கொண்டு சிங்கள வாக்குகளை மட்டும் இலக்கு வைத்து வெற்றி பெறுவதற்கு ஜனாதிபதி முற்படுகின்றார் எனக் கூறுவது தவறாகும்.”என்றார். (ம-7)

## காங்...

ளது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஒரு வழி கட்டணமாக 27 ஆயிரம் ரூபாயும் இரு வழிக் கட்டணமாக 53,500 ரூபாயும் அறவிடப்படவுள்ளது.

“செரியபாணி” என்று பெயரிடப்பட்ட குளிரூட்டி வசதிடன் கூடிய இந்தகப் பயணிகள் கப்பல் கொச்சினில் தயாரிக்கப்பட்டது.

ஒரு பயணி 50 கிலோ எடையுள்ள பொருட்களை எடுத்துச் செல்லலாம். மேலதிகமாக எடுத்துச் செல்லும் எடைக்கு மேலதிக கட்டணம் அறவிடப்படும்.

3 மணி நேரத்தில் காங்கேசன்துறையிலிருந்து நாகபட்டினத்தை சென்றடைய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## அந்நிய...

அனுப்பும் பணத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் 8 மாதங்களில் 3,863 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணியை அவர்கள் இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் 8 மாதங்களில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் 2,215 மில்லியன் அமெரிக்க டொலர்களை நாட்டிற்கு அனுப்பியுள்ளதுடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் இந்த தொகை 74.4 வீதமாக அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2023/10/07
சீட்டிழுப்பு இலக்கம் 5260
W 6 9 3 3 3 1
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3502
சீட்டிழுப்பு திகதி 07.10.2023
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 11 19 34 64
P 76772
தேசிய லொத்தர் சபை

லக்கி 7
திகதி 07.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0086
L7 இலக்கம் 3 4
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 3 1 5 4 9 3

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.07
சீட்டிழுப்பு இலக்கம் 569
கும்பம் 16 25 29 31 கும்பம்
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2023.10.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1290
K 24 37 55 63 K
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance 35078

மெகா பவர்
திகதி 07/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1608
K 25 12 53 57 59
Double Chance 38683

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2234 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.10.07 தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 11 12 42 63 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,987,796.40
DLB

சனிதா
திகதி 2023.10.07 வெற்றி வாரம் 4395 வர்ணம் இளம் பச்சை
25 33 43 67 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,859,848.00
66160
DLB

சீட்டிழுப்பு வாரம் 3946 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.10.07 தினம் சனிக்கிழமை
09 16 48 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,985,348/-
406752 367
DLB

திகதி 07.10.2023 வெற்றி வாரம் 1410 வர்ணம் சிவப்பு
D 29 27 34 58 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 449,077,484.20
735690 488
DLB
தொலைபேசி : 011-2 333 545-47
Web : www.dlb.lk

சංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 635 திகதி 2023-10-07 வர்ணம் ஆரஞ்சு நிறம்
F 21 41 46 07
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,133,440.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2060
சீட்டிழுப்பு திகதி : 2023.10.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,942,736/-
17 27 28 30 A
964046
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Vacancy
உடனடி வேலைவாய்ப்பு

**IMS** Institute of Medical Sciences

- நோயாளிகாவு வண்டி ஓட்டுனர் (Ambulance driver)
  வயது :- 25 தொடக்கம் 45 வரை
- இரவு நேர காவலாளி ( Night Time Security )
  40 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்க முடியும்
  சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும்

(C-7393)

Green Memorial Hospital, Manipay
☎ - 0212256990
- 0760477106

## இலவசம்/Free

**Kamalam Varma Clinic**
**கமலம் வர்ம சிகிச்சையகம்**

(அக்குபன்ச்சர் மற்றும் வர்ம சிகிச்சையகம்)
சகல நோய்களிற்கும் குறைபாடுகளிற்கும் சிகிச்சை அளிக்கப்படும்
25 வருட சேவை நிறைவையொட்டி புதிய பெயருடனும் பொலிவுடனும் Oct-9 தொடக்கம் 18 வரை இலவச சிகிச்சையும் ஆலோசனையும் வழங்கப்படும்.
அனைவரும் வாரீர்
நோய் எதுவாயினும் தீர்வு உண்டு.
(ACU) Dr.Sankar - 077 035 7307
K.K.S Rd, Kokuvil, Jaffna.
(முன் பதிவு அவசியம்)

(17355)

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS
பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

யாழ் - கொழும்பு
2,900/=
வடமராட்சி - கொழும்பு
2,700/=



(17010)

T.P:077 544 8503

## அமெரிக்க லொத்தர் விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2025ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226244
எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
விண்ணப்ப முடிவு திகதி 07-11-2023
(C-7399)
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம்-1 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | கொழும்பு 0777469777 | திருகோணமலை 0768226237 | சாவகச்சேரி 0768226242 |
| யாழ்ப்பாணம்-3 0768226243 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | [illegible] 0776697960 | கொடிகாமம் 0764550675 |
| [illegible] 0768226238 | புத்தூர் 0764550671 | [illegible] 0777718322 | [illegible] 0777726322 | [illegible] 0743900353 | [illegible] 0777720322 |
| கோப்பாய் 0764550674 | V2 Travels | | ஏனைய மாவட்டங்கள் 0768226236 | | |

## அலுவலக வேலை - பயிற்சி
2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு
*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்



(C-7399)
சம்பளம் - 60,000/- (2 மாதம்)
V2 TRAVELS - 0777-068-777

## வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

## IELTS
Academic | General | UKVI
#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 18)
நேரடி , zoom வகுப்புக்களாக
(C-7391)

A1 **IELTS Life Skills** திருமணம் செய்து UK செல்வோருக்கானது
B1 **Skilled Worker Visa** மூலம் வெளிநாடு செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
புதிய பிரிவு ஆரம்பம் 7/10/2023-SAT, 9/10/2023-MON-9 am or 3 pm
யாழின் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
DMI COMPUTER EDUCATION 0777 17 35 17
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, [illegible] வீதி 0777 24 07 07 021 222 4403

| | | | | |
|---|---|---|---|---|
| வடமராட்சி 021 226 2470 0777577333 | சாவகச்சேரி 021 227 0775 0777227074 | சுன்னாகம் 021 224 1970 0776032300 | சரவணிச்சந்தி சண்டிலிப்பாய் 021 225 6665 0761354503 | கிளிநொச்சி 021 228 5655 0776398096 |

## மலிவு விற்பனை
கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS**
பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்
**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும்.
(C-7355)
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

## விற்பனைக்கு
10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள கடல் அட்டைப் பண்ணை சகல வசதிகளுடன் அரியாலை கிழக்கில் விற்பனைக்குண்டு. புதிய இறால் கூடு, நில வலை, நூல் வலை, கரைவலை விற்பனைக்குண்டு.
(17365)
070 656 0342
077 875 7860

## கல்வி நிலையம் ஒன்றுக்காக...
## ஆசிரியர்கள் தேவை
இடம் : தெல்லிப்பளை
தரம் 01 - 11 வரை
பாடங்கள் : தமிழ், ஆங்கிலம், சுகாதாரம், குடியுரிமை, புவியியல், சுற்றாடல்
(17305)
077 83 43 666
077 21 40 675

## கார் விற்பனைக்கு
தனிப்பட்ட பாவனையில் உள்ள (Mahendra kuv Nxt) CBL XXXX இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை. வாங்க விரும்புவோர் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.
(17382)
076 231 8693
075 054 4020

## CANADA VISA
Canada, UK, France, Australia மற்றும் அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
1)Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
Contact : VISA Consultant,
136, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584
(17371)

## காணி விற்பனைக்கு
கல்வியங்காடு புதிய செம்மணி றோட் ஞான வைரவர் கோயில் அருகில் 15 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.(நிலப்பரப்பு)
- இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்டுள்ள நிலையில்
- நல்ல தண்ணீர் நிலம்
- பனை மரங்கள் உள்ள காணி
- மேட்டுக் காணி
- வீடு கட்டுவதற்கு உகந்தது.




தொடர்புகளுக்கு:
077 615 3238
077 463 9303
(17368)

## Flight Tickets Booking....
கனடா, லண்டன், பிரான்ஸ் மற்றும் ஏனைய நாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டு முன்பதிவுகள் மற்றும் Travel insurance களினை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
(17384)
Apex Travels - யாழ்ப்பாணம்
077 759 7598

## காணி விற்பனைக்கு
கோண்டாவில் ராஜா பிளாசாவிற்கு அருகாமையில் உள்ள திருச்செல்வம் ஒழுங்கையில் 1 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
(17376)
077 233 8321
077 540 8208

## பணிப்பெண் தேவை
வைத்தியராகப் பணிபுரியும் 4 பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கி நின்று வீட்டுப் பணிகளை மேற்கொள்ள 30-50 வயதுடைய பணிப்பெண் தேவை.
**சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.**
(17341)
070 761 9757

## பெண் வேலையாட்கள் தேவை
பண்டத்தரிப்பு கீரிமலை வீதியில் இருக்கும் தையல் கடைக்கு தைக்கக் கூடிய பெண் பிள்ளைகள் உடனடியாக தேவைப்படுகின்றனர்.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். உடனே தொடர்பு கொள்ளவும்.
(17379)
077 029 4603
074 068 7289

## Happy Supermarket - உரும்பிராய்
உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 257/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 175/= | (max 3Kg) |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 290/= | (max 3Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 439/= | |
| 1 Kg கோதுமை மா | - 180/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 187/= | |
| 1 Kg றவை | - 288/= | |
| 400 g அங்கர் பால்மா | - 1030/= | ~~(1080/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~(80/=)~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 262/= | ~~(330/=)~~ |
| 300g நெஸ்டமோல்ட் | - 570/= | ~~(620/=)~~ |
| 70g Baby Soap | - 108/= | ~~(145/=)~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= | ~~(430/=)~~ |

1030/=




~~1080/-~~

(17384)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.
பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30

## காணி விற்பனைக்கு
இணுவில் பகுதியில் 10 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு
(17378)
076 105 6343

## கணக்காளர் தேவை
கிளிநொச்சியில் இயங்கும் ஹாட்வெயர் நிறுவனத்துக்கு கணக்காளர் தேவை.
(கணனி அறிவும், கல்வித்தகைமை A/L)
(17380)
077 507 8272

## விற்பனைக்கு
TATA 207 பிக்கப் விற்பனைக்கு
தொடர்புகளுக்கு
(C-7396)
075 711 4480

## இராஜ மருத்துவம்
கரப்பன், கிரந்தி, சோரியாசிஸ், மதுமேகம், வெள்ளை படுதல், கொப்பவாயு, தீட்டு ஒழுங்கீனம், உடல் மெலிவு, பருமன், செங்கண்மாரி, பக்க வாதம்,ஆண்மைக்குறைவு, சிறிய மார்பகம், மன அழுத்தம் சிகிச்சை பெறுவதற்கு
T.P : 076 274 4488
பேறறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர்,
வல்லை வீதி, சங்கானை
(C-7390)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191 பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org